சித்திரக் கல்வி

6ம் தரம் தொடக்கம் 11ம் தரம் வரையிலான
மாணவர்களுக்குரியது (புதிய பாடத்திட்டம்)

ஆக்கம்
த.சிவயோகலிங்கம். B.A, Dip.Ed.
(Special Trained in Art)

POOBALASINGAM BOOK DEPOT

T. Kularatnarajah.

சித்திரக் கல்வி

6ம் தரம் தொடக்கம் 11ம் தரம் வரையிலான

மாணவர்களுக்குரியது

(புதிய பாடத்திட்டம்)

ஆக்கம்

K. T. சிவயோகலிங்கம் B. A., Dip. - in - Ed.

(Special Trained in Art)

வெளியீடு

பூபாலசிங்கம் புத்தகசாலை

340, செட்டியார் தெரு,

கொழும்பு – 11.

புத்தகத்தின் பெயர் : சித்திரக் கல்வி

ஆசிரியர் : க. த. சிவயோகலிங்கம்

உரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : தை 2000
பூபாலசிங்கம் புத்தகசாலை
340, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.

அச்சுப் பதிப்பு : யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
48பீ, புளுமெண்டால் வீதி,
கொழும்பு – 13.

விலை : 150 ரூபா.

சித்திரத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆரம்ப கால மனிதன் தனக்கு அவசியத் தேவையான உணவைத் தேடி அலைந்து வாழ்ந்தான். இம்மனிதர்கள் இயற்கை அனர்த்தங்களில் இருந்தும், கொடிய மிருகங்களில் இருந்தும் தம்மை பாதுகாக்க குகைகளில் வாழ்ந்தனர். அலைந்து திரிந்த மனிதன் நிலையான இடத்தில் உணவு கிடைத்ததும் அலைந்து திரிவது குறைந்தமையால் ஓய்வு நேரம் கிடைத்தது. இவ் ஓய்வு நேரத்தில் சிந்திக்கலானான். இச்சிந்தனைகள் மனவெழுச்சியாக மாறி அவர்கள் தாம் வாழ்ந்த குகைகளில் ஓவியங்களை வரையத் தொடங்கினர். இவ்வாறே சித்திரத்தின் தோற்றம் வளர்ந்தது.

எமது சிறார்கள் ஓடித்திரியும் பருவங்களில் வீட்டுச் சுவர், மதில், கொப்பி என்பவற்றில் கையில் கிடைக்கும் கரித்துண்டு, இலை, பென்சில்களால் மனம்போன போக்கில் கிறுக்குவார்கள். எதை எழுதக் கொடுத்தாலும் வட்டவடிவமாக கீறுவார்கள். இவ்வாறு செய்வது அவர்களது மனதில் உள்ள வெளிப்பாடுகளே. இவ் வெளிப்பாடுகளை சித்திரம் மூலம்தான் வெளிக்காட்ட முடியும்.

சித்திரமானது எல்லா வகையான கற்றலுக்கும் அடிப்படையானது. இதன்மூலம் சிந்தித்து, கணித்து, ஊகித்துக் கொண்டு செயல்படுவது எல்லா வகையான செயற்பாடுகளுக்கும் அடிப்படையானது எனவே தான் சித்திரம் ஏனையவற்றுக்கு முதன்மையானது எனக் கூறமுடியும்.

சித்திரம் கட்புலனால் கண்டறியும் ஓர்கலையாகும். கவிஞன், ஓவியக்காரன், சிற்பி ஆகியோர் ஒரே தன்மையான உள்ளங்கள் கொண்டவர்கள். ஒவ்வொருவரும் வெளியிடும் கருத்துக்கள் சிந்தனைகள் வேறு வகையானவை. எனினும் கலை அம்சம் ஒரே தன்மையானவை. எனவே சித்திரம் வரைவதற்கு பொறுமை அழகுணர்ச்சி, ஒழுங்கு, கடமை, நேர்மை, ரசஞான உணர்ச்சி விடாமுயற்சி என்பன அவசியம். இவை ஒருங்கே அமைந்து விட்டால் சமுதாய முன்னேற்றம் அவர்களது கையில்தான்.

இன்று பல்வேறு வகையான சித்திர வகைகள் காணப்படுகின்றன. அவை காலத்துக்கு ஏற்ற முறையில் மாறி வளர்கின்றன. நீர்வர்ணம், மெழுகுவர்ணம், ஒட்டுச் சித்திரம், எண்ணெய் வர்ணம், கோலம் போடுதல், ஙண்கலைப் பொருள் ஆக்குதல், சிற்பம் அமைத்தல் என்பன அவையாகும்.

கோடுகள்

கோடுகள் இரேகைகள் என அழைக்கப்படுகின்றன. கோடுகளின் தன்மை, அமைப்பு, அசைவு என்பவற்றை அறிந்து சிறப்பாக செய்வதற்கு கோடுகள் அவசியமாகும். மாணவர்கள் சிறுவயதில் இருந்தே கீறிப் பழகுவதனால் சித்திரத்தில் நாட்டம், இயல்பாக்கம் ஏற்பட்டு சுயமாக சிறந்த உயர்த்துடிப்புடைய படங்களைப் பெற முடியும்.

கோடுகள் பல வகைப்படும். அவை –

1. நேர்கோடு
2. கிடைக்கோடு
3.  சமாந்தரக் கோடு
4. தடித்த கோடு
5. சாய்வுக் கோடு
6.  அலைகோடு

7. கோணக்கோடு/முறிகோடு

8. சுருள்கோடு

9. வட்டக்கோடு

10. நீள்வட்டக் கோடு

11. முட்டைக்கோடு

12.  ஒழுக்குக் கோடு

உதாரணம்



1. நேர்கோடு
2. இடைக்கோடு
3. சமாந்தரக் கோடு
4. தடித்தகோடு
5. சாய்வுக் கோடு
6. அலைக்கோடு
7. கோணக்கோடு
8. சுருள்கோடு
9. வட்டக்கோடு
10. ஒழுக்குக்கோடு
11. நீள் வட்டக்கோடு
12. முட்டைக்கோடு

அளவீடுகள்

நாம் எதனைச் செய்யும் போதும் கணக்கிட்டு செய்கின்றோம். இக் கணிப்பீடானது குடும்பம் வியாபார நிலையங்கள், நிர்மாண வேலைகள், சித்திரங்கள் போன்றவற்றுக்கு தேவையானது. இவ் அளவீடுகள் சித்திரம் வரைவதற்கு அவசியமாகின்றது. ஏனெனில் நீளம், அகலம், உயரம் என்பவற்றுக்கு ஏற்பவரைந்தால் தான் முழுமையான தன்மையைப் பெறும். அளவீடுகள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றது.

1. ஈரளவு 2. மூவளவு

1. ஈரளவு

இவ் அளவீடு இருபரிமாணம் என்று அழைக்கப்படும். இதற்கு நீளம், அகலப் பாத்திரம் உடையது. ஒளி நிழல் காட்டப்படாமல் தட்டையான பூச்சுக்களைக் கொண்டதும் திரட்சி காணப்படாமலும் புற உருவச்சித்திரமாகக் காணப்படும்.

உதாரணம் –



2. மூவளவு

இவ் அளவீடு முப்பரிமாணம் என்று அழைக்கப்படும். இதற்கு நீளம், அகலம், உயரம் உடையது. இதன் மூலம் தூரம், அழகு, திரட்சி என்பவற்றை காட்ட முடியும். ஒளிநிழல் காட்டப்பட்டும் உருவங்களின் தன்மை தூரதரிசனம், கண்மட்டம் என்பனவற்றின் சிறப்பை காண முடியும்.



தூர தரிசனம்

உற்று நோக்கி அவதானிக்கும் தன்மையைக் கொண்டது. இது தூரப்பார்வை, தூரநோக்கு எனவும் அழைக்கப்படுகின்றது. புகையிரதப்பாதை, கட்டிடத் தொகுதி, வீதி ஓரங்களில் நாட்டப்பட்டுள்ள விளக்கு தூண்கள், மரத்தோப்புக்கள் என்பவை அண்மையில் தெரியும் போது பெரிதாகவும் தூரம் செல்லச் செல்ல சிறிதாகவும் காட்சியளிக்கும். ஒரே அளவான ஒரே மாதிரியான பொருட்கள் ஒவ்வொன்றும் சமதூரத்தில் வைக்கும் போது இவ்வாறு காட்சியளிக்கின்றன. இவ்வாறு இவை அமைவதற்கு எமது கண்ணின் அமைப்பே காரணம் ஆகும்.

உதாரணம்



சமநிலை

இது சமச்சீர் என்று அழைக்கப்படும் பிள்ளைகள் கணிக்கும் ஆற்றல்களை இவை கொண்டுள்ளன. ஒரு பொருளை வரையும்போது வரையப்படும் பொருளானது இருபக்கமும் சமமாக காணப்பட்டு சமநிலை பேணப்பட்டு காணப்படுமாயின் சமச்சீர் என்று அழைக்கலாம். ஒரு மாணவன் சித்திரம் வரையும் போது தாளில் நடுப்பகுதியை மையமாக வைத்தே வரைய வேண்டும். தாளின் ஏதாவது ஒரு மூலையில் தொடங்கி சித்திரம் வரையப்படுமாயின் சமநிலை குன்றிக் காணப்படும்.

உதாரணம் –



சித்திரக் கலையின் வகைகள்

சித்திரத்தின் வெளிப்பாடுகள் பல்வேறு வகையான முறைகள் மூலம் வெளிப்படுத்தப் படுகின்றன. ஒவ்வொரு சித்திரமும் அவற்றின் தன்மைகளுக்கு ஏற்ப சிறப்பானதாகக் காணப்படும். அவை –

1. கோட்டுச் சித்திரம் (தூரிதரேகைவரைதல்)

இச்சித்திரத்தின் மூலம் ஞாபகப் படுத்தப்பட்ட பொருளையோ காட்சியையோ துரிதமாக குறைந்தளவு ரேகைகளை பயன்படுத்தி கருத்தின் ஆழத்தை வெளிப்படுத்தலாகும். இவ்வரைதல் மூலம் தடித்த, மெல்லிய ரேகைகளை ஒன்று சேர்த்து வரைய வேண்டும். இதன்மூலம் குறிப்பிட்ட நேரத்தில் குறைந்ததொகை இரேகைகள் மூலம் பயனைப் பெறமுடியும். இலைகள், பூக்கள், மிருகங்கள், பறவைகள், காட்சிகள் என்பவற்றை சிறப்பாக வரைய முடியும்.

2. கிறுக்கல் சித்திரம்

பிள்ளைகள் சுயாதீனமாக தமது எண்ணங்களை கோடுகளால் கிறுக்குவதன் மூலம் சிலவகையான உருவங்களை அச்சித்திரத்தின் மூலம் பெறப்படுவதாகும். உருவங்களை நினைத்து வரையாமல் அவசரப்படாமல் விரைவுடன் கூடிய கை அசைவுகளால் கோடுகளின் இணைப்புக்கள் மூலம் வடிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

3. ஒட்டு வேலைச்சித்திரம்

இயற்கையாக கிடைக்கும் பலவிதமான நிறக்கடதாசிகள் நிறத்துணிகள், இலைகள், பூக்கள், விதைகள், பறவைகளின், இறகுகள், மிருகங்களின் உரோமங்கள், பஞ்சுகள், மணிகள், தானியங்கள் போன்றவற்றைக் கொண்டு அமைப்பதாகும். உருவங்கள், காட்சிகள், பூக்கள் என்பவற்றை வரைந்து அவற்றின் மேல் பசைகள் பூசி மேற்கூறியவற்றினை ஒட்டி உருவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு பெறும் சித்திரம் சிறியோர் தொடக்கம் முதியோர் வரை மகிழ்ச்சி தரக்கூடியனவாக அமையும். இதன் மூலம் ஒரு சித்திரத்தை மட்டும் பெறலாம். இச்சித்திரத்தினை 'கொலாஜ்' சித்திரம் என அழைப்பர்.

4. மெழுகு வர்ணச் சித்திரம்

துணி, கடதாசி என்பவற்றின்மீது மெழுகினால் உருவங்களை வரைந்து அதன்மேல் வர்ண சாயங்களை பூசுவதால் மெழுகுபட்ட இடத்தில் சாயங்கள் படாமல் ஏனைய பகுதிகளில் சாயங்கள் பட்டு பிரகாசமான அலங்கார வடிவங்களைப் பெறமுடியும். நீர்வர்ணங்களையும் மெழுகையும் மாறி மாறி உபயோகிப்பதன் மூலம் சித்திரங்களை அமைத்துக் கொள்ள முடியும். இம்முறையின் மூலம் தான் "பற்றிக்" சித்திரம் அமைக்கப்படுகின்றது.

5. நீர்வர்ணச் சித்திரம்

வர்ணங்களை நீரில் கரைத்து பூசுவதாகும். வர்ணத்தின் தன்மையை கூட்டுவதற்கு நீரைக்குறைத்தும் வர்ணத்தின் தன்மையை குறைப்பதற்கு நீரைக் கூட்டியும் வர்ண திணிவுகளை ஆக்க முடியும். நீர் வர்ணத்தின் மேல் இன்னொரு நீர்வர்ணத்தைப் பூசினால் முதலில் தீட்டப்பட்ட வர்ணத்தின் தன்மை தெரியும்.

6. எண்ணெய் வர்ணச் சித்திரம்

இச் சித்திரம் ஆறுதலாக வரைய வேண்டும். எண்களை வர்ணங்கள் காய்ந்த பின்னரே அடுத்த எண்ணெய் வர்ணத்தைப் பூசவேண்டும். இவ்வாறு செய்யாது விடின் நிறம், அமைப்பு, தன்மை, சாயல் எல்லாம் அழிந்து விடும். இவ்வண்ண எண்ணெய்ச் சித்திரம் பிரகாசமும் நிறங்களின் தன்மையும் கொண்டு சிறப்பானதாக இருக்கும்.

7. கரைச் சித்திரம்

சீலை, வேட்டி, சாறம், திரைச்சீலை, கதவு, யன்னல்கள், வாழ்த்துமடல்கள், சாடிகள் என்பனவற்றில் இக்கரைச் சித்திரம் வரையப் படுகின்றது. இச் சித்திரம் ஒரு பொருளின் ஓரங்களில் அலங்கார வடிவங்களைக் கொண்டு வரையப் படுவதாகும். இவை பார்வைக்கு அழகானதாக காணப்படும்.

8. எழுத்துச் சித்திரம்

ஒழுங்குபடுத்தி எழுத்துக்களை தொடராக அடுத்தாற் போல் எழுதி அவற்றை அழகு படுத்தி வர்ணம் பூசுவதன் மூலம் இச்சித்திரத்தினைப் பெறலாம். எழுத்துக்கள் ஒரே வடிவானதாகக் காணப்படும். தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு போன்ற எந்த எழுத்துக்களாலும் வரையலாம்.

9. பரவுரூபச் சித்திரம்

ஒரு பொருளினை தேவையான அளவுக்கு ஒரே வடிவான அலங்காரங்களை கிரம முறையில் அமைப்பர். அலங்கார வடிவம் பரவுரூபச் சித்திரம் ஆகும். படுக்கை விரிப்பு, கம்பளம், திரைச்சீலை, பாய்கள், தளமாபிள்கள் போன்றவற்றுக்கு இச்சித்திர அமைப்பு சிறந்தது. பூ, இலை, கொடி, பறவைகள், மிருகங்கள், வட்டம் சதுரம் கோடு என்பவற்றை உபயோகித்துக் கொள்ளலாம்.

10. பொருட் பார்த்து வரைதல்

பொருட்களின் தன்மை, வேறுபாடு, உயர அகல பரப்பளவு என்பவற்றை கணக்கிட்டு ஒளிநிழல் காட்டி குறிப்பிட்ட பொருட் கூட்டத்தினை அவதானித்து வரைதலாகும். இவ்வகை சித்திரம் உயிர்த் துடிப்புடையனவாக காணப்படும்.

அச்சுப் பதித்தல்

இம்முறைகளில் தற்போது பல வழிகள் காணப்படுகின்றன. பாலர் வகுப்பு முதல் மாணவர்கள் அச்சுப் பதித்தல் மூலம் பல வடிவங்களை அமைக்கின்றனர். வாழைத் தடல், உருளைக்கிழங்கு, வெண்டிக்காய், பாகற்காய், பப்பாசிக்காய் இவற்றின் குறுக்கு வெட்டுமுகப் பகுதிகளை தூய வர்ணங்களில் பூசி பதித்து எடுக்கும் முறையாகும். இம்முறை கிறபிக் என்றும் அழைக்கப் படுகின்றது.

மொனோ கிறபிக் முறை

இம்முறையின் மூலம் ஒரு பிரதியை மட்டும் பெற முடியும். ஒரு கண்ணாடித் துண்டின் மேல் நீர் வர்ணங்களினால் படத்தினை வரைந்து அவ் நீர் வர்ணம் காணமுன் அதே அளவான ஒரு கடதாசியை வைத்து உருளையால் உருட்டிவிட்டு கடதாசியை எடுத்துப் பார்த்தால் முதலில் கண்ணாடியில் வரைந்த படத்தின் பிரதி இருக்கும். இம்முறைதான் மொனோ கிறபிக் முறை எனப்படும்.

லைனோ கிறபிக் முறை

இம்முறையானது லினோ அட்டைகளில் விரும்பிய ஒரு வடிவத்தை வரைந்து அதனை குடைந்து எடுக்கவேண்டும். குடைந்த பகுதி தாழ்வாகவும் குடையாத பகுதி உயர்வாகவும் காணப்படும். இதன்பின் அச்சுமையை பூச வேண்டும். இதன்மேல் கடதாசியை வைக்கும் போது குடையாத பகுதி மையமானது கடதாசியில் காணப்பட்டு குடைந்த வடிவம் வடிவாக தெரியும். இம்முறை மூலம் கறுப்பு, வெள்ளை பிரதிகளைப் பெறலாம். இம்முறையே லைனோ கிறபிக் முறையாகும்.

லிதோக் கிறபிக் முறை

பெரிய இயந்திரங்கள் மூலம் வர்ண அச்சுப் பதித்தலாகும். மூன்று வர்ணங்களை பயன்படுத்தி படத்தினைப் பெற முடியும். கலண்டர்கள், வாழ்த்துமடல்கள் என்பன இம்முறையின் கீழ் அமைக்கப்படுகின்றன. இம்முறையின் மூலம் பல பிரதிகளைப் பெற முடியும். இதனையே லிதோக் கிறபிக் என அழைப்பர்.

மொசாச் முறை ஓவியம்

உடைந்த பீங்கான் துண்டுகள், உடைந்த கண்ணாடித் துண்டுகளினால் உருவங்களை உருவாக்கி பசையினால் ஒட்டி அமைத்தலாகும். இவ்வகை சித்திரம் கிறிஸ்தவ ஆலயங்களில் காணப்படுகின்றது.

புனையா ஓவியம்

வர்ணம் தீட்டாது கோடுகளினுடாகவே வரையும் சித்திரங்கள் புனையா ஓவியம் எனப்படும்.

வர்ணங்கள்

நிறங்கள், வர்ணங்கள் என அழைக்கப்படும். இவை குழதைகளுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கின்றன. இவ் வர்ணங்களினால் பல்வேறு சேர்க்கைகள் உருவாக்கி தேவையான வர்ணங்களை பெற முடிகின்றது. ஆரம்பத்தில் மூன்று வர்ணங்களே காணப்பட்டன. அவை சிவப்பு, மஞ்சள், நீலம். இவ் வர்ணங்கள் ஏனைய வர்ணங்களை உருவாக்க அடிப்படையாக இருந்தமையால் இம் மூன்று வர்ணங்களை பின்வருமாறு அழைக்கப்படும்.

மூலவர்ணம், ஆரம்ப வர்ணம், தனி வர்ணம், தூய வர்ணம், கலப்பில்லா வர்ணம் என அழைக்கப்படும்.

துணை வர்ணங்கள்

மூல வர்ணங்களின் சேர்க்கையால் பெறப்படுபவை பிரதான துணை வர்ணங்களாகும் இவ் வர்ணங்களை கலப்பு வர்ணங்கள் என அழைக்கப்படுகின்றன.

சிவப்பு + மஞ்சள் = செம்மஞ்சள்
மஞ்சள் + நீலம் = பச்சை
நீலம் + சிவப்பு = ஊதா

இத்துணை வர்ணகளை மேலும் ஒன்றுடன் ஒன்று சேர்க்கும் போது பல இடைநிலை துணை வர்ணம் பெறப்படுகின்றன.

சிவப்பு + செம்மஞ்சள் = சிவப்பு செம்மஞ்சள்
செம்மஞ்சள் + மஞ்சள் = மஞ்சள் செம்மஞ்சள்
மஞ்சள் + பச்சை = மஞ்சள் பச்சை
பச்சை + நீலம் = நீலப்பச்சை
நீலம் + ஊதா = நீல ஊதா
ஊதா + சிவப்பு = சிவப்பு ஊதா

இவ்வாறு ஓர் வர்ண அமைப்பில் 12 வர்ணங்களை பெறமுடிகின்றது. இவ்வாறு பெறும் வர்ணங்களை அவற்றின் தன்மைகளுக்கு ஏற்ப இரண்டு பிரிவாக பிரிக்கலாம். அவை

1. வெப்ப வர்ணங்கள்
2. குளிர் வர்ணங்கள்

வெப்ப வர்ணங்கள் - சிவப்பு, சிவப்பு செம்மஞ்கள், மஞ்சள் செம்மஞ்சள், மஞ்சள், மஞ்சள் பச்சை ஆகும்.

இவ் வர்ணங்களை முன் செல் வர்ணங்கள் என்றும் அழைக்கப்படுகின்றது. இவ் வர்ணங்கள் மினுக்கமும் ஒளித்தன்மையும் பார்ப்பவர்களுக்கு வெப்பத் தன்மையை உணர்த்தும் கோபம், பயம், உணர்ச்சி, கொடுமை, காரியசித்தி போன்றவற்றுக்கு உபயோகிக்கலாம். யுத்தகாயம், விபத்து, சண்டை, பரிசளிப்பு, பெரஹரா போன்ற காட்சிகளுக்கு இவ் வர்ணம் உகந்தது.

குளிர் வர்ணங்கள்

பச்சை, நீலப்பச்சை, நீலம், நீலஊதா, ஊதா, சிவப்பு ஊதா. இவ்வர்ணங்களை பின் செல்வர்ணங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை குளிர்ச்சி தன்மை கொண்டவை பிரகாச தன்மை அற்றவகையாகவும், இருள் தன்மையானவையாகவும் தூரநோக்கு கொண்டவையாகவும் காணப் படுகின்றன. கடற்கரை, வனம், நிலா போன்ற காட்சிகளுக்கு இவ் வர்ணங்கள் உகந்தவை

எதிர்வர்ணங்கள்

எதிர்வர்ணங்கள் எனப்படுவது ஒவ்வொரு வர்ணங்களும் அமைந்திருக்கும் திசைக்கு ஏற்ப காணப்படுகின்றன. அவை பின்வருமாறு :

சிவப்பு	–	பச்சை
சிவப்பு செம்மஞ்சள்	–	நீலப்பச்சை
செம்மஞ்கள்	–	நீலம்
மஞ்கள் செம்மஞ்சள்	–	நீல ஊதா
மஞ்சள்	–	ஊதா
மஞ்சள் பச்சை	–	சிவப்பு ஊதா

இவ்வர்ண அமைப்பை இலகுவாக்க வர்ண சக்கர அமைப்பின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

வர்ணச் சக்கரம்



இவ்வர்ண அமைப்பில் இடம் பெறாமல் இரு வர்ணங்கள் உள்ளன. அவை வெள்ளை, கறுப்பு இவற்றினைப் பொது வர்ணங்கள் என அழைக்கலாம்.

நீல வர்ணத்தை 'அல்ரா மரின்" எனவும் சிவப்பு வர்ணத்தை "கிறிம்சன்" என அழைப்பர்.

பண்டைய காலங்களில் வர்ணங்கள் பெற்ற முறைகள்

இயற்கையாக கிடைக்கும் தாவரங்கள் மூலிகைகள், தரையில் காணப்படும் கனியங்கள் என்பற்றில் இருந்து பெற்றுக் கொண்டனர்.

சிவப்பு சாதிலிங்கம், இரும்பு மூலகம், வர்ணக் கற்கள், பலா போன்றவற்றில் இருந்து பெறப்பட்டன.

மஞ்சள் மஞ்சள்களிமண், கொக்கட்டு மரத்தின் பாலில் இருந்து பெறப்பட்டது.

பச்சை பொன்னவரை, அவுரி இலை என்பவற்றை இடித்து சாறெடுத்து பெறப்பட்டது. நீலத்தையும், மஞ்சளையும் சேர்த்தும் பெற்றனர்.

வெள்ளைசுண்ணாம்பு, சல்பேற்று, வெண்களி, சுட்டசிப்பி, வெண்சங்கு என்பவற்றில் இருந்து பெறப்பட்டது.

கறுப்பு சுட்டகரி, பலாப்பாலையும் கொக்குண பாலையும் பழைய சீலைத்துணியில் பூசி ஒரு புதிய மண் சட்டியில் இட்டு சுட்டு அதில் படியும் கரியை பயன் படுத்தினர்.

வர்ண வகைகள்

வர்ண ஊடகங்கள் பல வகைப்படும். வர்ண வகைகளை உபயோகிக்கும் போது சித்திரக்கலை அழகுதரும் செயற்பாடாக அமையும். அவை நீர்வர்ணங்கள், தூள்வர்ணம், எண்ணெய் வர்ணம், போஸ்ரல் வர்ணம், கலப்பு வர்ணம், பென்சில் வர்ணம், லெக்கர் வர்ணம் போன்றவகைகளாகும்.

நீர் வர்ணம்

இவ்வர்ணத்தினை ஒளிபுகு வர்ணம் என அழைப்பர் இவ் வர்ணம், பெட்டிகளில் கட்டிகளாகவும் நீர்களில் கூழ்த்தன்மையாகவும் காணப்படும். இவை பின்வரும் தன்மை கொண்டவை.

1. நீருடன் பாவிக்கும் வர்ணம்
2. பிரகாசமானவை
3. இலகுவில் அழிக்க முடியும்
4. நீர்வர்ணத்தை தீட்டினால் அவ்வர்ணத்தை அழித்தோ மேல் பூசியோ வேறு நிறங்களை பாவிக்க வேண்டும்.
5. விலை குறைவானதும் வர்ணங்களை கையாளும் பயிற்சிக்கும் ஏற்றது.

தூள் வர்ணம்

இவ்வகை வர்ணங்கள் ஒளி புகா வர்ணம் என அழைக்கப்படும். இவை பெட்டிகளிலும், தகர டின்களிலும் தூளாக அடைக்கப் பட்டுள்ளன. இவை டெம்பர வர்ண வகையைச் சேர்ந்தவையாகும். இவ் வர்ணத்தை நீருடன் முட்டை வெண்கரு, மீன் கொழுப்பு, பசை போன்ற திரவப் பொருட்களுடன் கலந்தும் வர்ணம் தீட்டலாம். இவை பின்வரும் தன்மையைக் கொண்டவை.

1. இலகுவில் வர்ணங்களை கலந்து பெறலாம்.
2. இவ்வர்ணம் இலகுவில் காய்ந்து விடும்.
3. நீர்சேர்த்து கலவையை பாவிப்பதால் பெரிய ஓவிய பாவனைக்கு உகந்தது.

எண்ணெய் வர்ணம்

இவ் வர்ணங்களும் ஒளி புகா வர்ணம் ஆகும். இவ்வர்ணத்தினை பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஜோன் வான்ஜக் கண்டு பிடித்தார். இவ்வர்ணங்கள் டின்களில் அடைக்கப்பட்டு இருக்கும். இவ் வர்ணங்களை கரைப்பதற்கு டேப்பன்டைன், லின்சிட் ஓயில், தின்னர், ஸ்பிரிட் போன்றவை பாவிக்கப்படுகின்றன. இவை பின்வரும் தன்மையைக் கொண்டவை.

1. பிரகாசமானவை
2. ஒரு நிறம்பூசி அது உலர்ந்த பின்னரே மற்றைய வர்ணம் பூசுதல் வேண்டும்.
3. ஏனைய நிறங்களிலும் பார்க்க நீண்ட காலம் பாவிக்கலாம்.
4. விரைவில் உலர்ந்து விடும்.
5. ஏனைய வர்ணங்களை பாவித்த பின்னரே இவ்வர்ணத்தில் பயிற்சி பெற வேண்டும்.

போஸ்ரர் வர்ணம்

ஒளிபுகாத் தன்மையைக் கொண்டது. இதனை டெம்பரா வர்ணம் என அழைப்பர். சுண்ணாம்பு வகையால் ஆனது. போத்தல்களில் அடைக்கப்பட்டு இருக்கும். பின்வரும் தன்மையைக் கொண்டு இருக்கும்.

1. நீரில் கரைக்க முடியும்.
2. கவர்ச்சிகரமான வர்ணதன்மையுடையது.
3. அலங்காரம் , போஸ்டர் சித்திரங்கள் வரைவதற்கு சிறந்தது.

பென்சில் வர்ணம்

குழந்தைகள் முதல் பெரியோர் வரை பாவிக்கப்படும் இவ்வர்ணம் பலவகையான வர்ணப் பென்சில்களாக உள்ளன. இரேகைச் சித்திரம் வரைவதற்கு உகந்தது.

மெழுகு வர்ணம்

வர்ணங்களை அடித்த பின்னர் நிறங்கள் மாறாமல் இருப்பதற்கு அவற்றுள் மேல் மெழுகை பூசுவதாகும். இவை பளபளப்பைக் கொடுக்கும். "பற்றிக்" முறை இம்முறையை பின்பற்றியே அமைக்கப்படுவதாகும்.

வர்ணங்களும் அவற்றின் செயற்பாடுகளும்

சிவப்பு – அபாயம், கோபம் போன்றதன்மை
மஞ்சள் – சுறுசுறுப்பு, பிரகாசம்
நீலம் – அன்பு, பாசம், உணர்ச்சி
பச்சை – குளிரானது, அபாயம் இல்லாதது
வெள்ளை – சமாதானம் தூய்மை, துக்கம்
கறுப்பு – துக்கம்
கபிலம் – நிலையில்லாதது
சாம்பல் – இருண்டதன்மை, அசுத்தம்

புராதன அலங்கார வடிவங்கள்



அரும்பு
சமாந்தரக் கோடுகளுக்கிடையில் வட்ட வடிவில் இவை அமைந்துள்ளன. கரை அலங்காரம், கோலங்கள் ஆகியவற்றை அழகுபடுத்த பயன்படுகின்றன.



பலாபொத்தி
தாமரை அலங்காரம் போல் காணப்படும் இந்து பௌத்த ஆலயங்களில் இவற்றின் வேலைப்பாடுகளைக் காணலாம். இது பண்டைய கலையாக்கம்.



வேல்பொத்த
நுண்கலைப்பொருட்களை அலங்கரிப்பதற்கு சிறந்தது, மரவேலைப்பாடுகளுக்கு வளைத்து அழகுபடுத்த பயன்படுகின்றது.



ஒற்றைச் சுழி
தனிச்சுழி என அழைக்கப்படுகின்றது. உலோக, பித்தளை வேலைப்பாடுகளுக்கும், அச்சுப் பதித்தலுக்கும் சிறந்தது.

இரட்டைச் சுழி
சுழி தெக்காய் என சிங்களத்தில் கூறப்படுகின்றது. மெழுகு, உலோக வேலைப்பாடுகளுக்கு சிறந்தது.



ஓரிழை
சிங்களத்தில் தனிபொட்ட லனுவ என்றும் தனியிழை எனவும் அழைக்கப்படுகின்றது. இவை கரை வேலைப்பாடுகளுக்கு சிறந்தது. நெய்தல், வர்ண அலங்காரமும் செய்யலாம்.



ஈரிழை
சிங்களத்தில் தெபொட்டவணுவ என அழைக்கப்படும். காயிற்றுப் பாய்கள், பின்னல் வேலைகள், நெசவு வேலைகளுக்கு இவை சிறந்தது.



சவடி
இவ் அலங்காரம் தையல் வேலைப்பாடுகளுக்கும் உலோக வேலைப்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.



கற்பிந்து
இவ்வகை அலங்காரம் கற்செதுக்கு வேலைகளுக்கு சிறந்தது.

கேது வடிவம்

கரை வேலைப்பாடுகளுக்குச் சிறந்தது.



அரசிலை

இவ்வகை அலங்காரம் தையல், ஆணி, பூமேடை ஓரங்களில் அலங்கரிக்க சிறந்த அலங்காரம்.



சீப்புரு

இவ்வுரு சிங்களத்தில் 'பணாவ' என அழைக்கப்படுகின்றது. இவ் அலங்காரம் லக்கர் வேலைகளுக்கு பயன் படுத்தப்படுகின்றது.



லியவல

கரையோர வேலைப்பாடுகளுக்கு இவ்வகை அலங்கார்ம் சிறந்தது. தையல் வேலைகளுக்கும் பயன்படுத்தப்படும்.

பதுறுவடிவம்

கரையோர வேலைப்பாடுகள், கரைவேலைகள், சீலைக்கரை, புற்பாய் வேலைகளுக்கும் பயன்படும்.



பூவும் மொட்டும்

இவ் அலங்காரத்தில் பூக்களும் மொட்டுக்களும் மேல் நோக்கி அமைந்து காணப்படும். தூண், தங்கம், வெள்ளி, வேலைப்பாடுகளுக்கு இவை உகந்தது.



அலைவரிசை

கடல் அலைபோன்ற இவ்உரு. கதவு வேலை தையல் வேலைகளுக்குச் சிறந்தது.

கரை அலங்காரம்

கரையலங்காரங்களுள் மிகச் சிறந்தது. இவை ஆலயங்களின் சுவர்க்கரை, மணவறை, போன்றவற்றுக்கும் பயன்படுகிறது.



வகதெக

ஒரு புள்ளியை இணைத்து இருவளைவுகளை அமைப்பதாகும். மரச்செதுக்கு வேலைக்கு சிறந்தது. சிங்கள மாணவன் சித்திரத்தில் பயிற்சி செய்வது இவ்வுருவில் தான்.

மட்பாண்ட அலங்காரம்

இவ்வகை அலங்காரம் மட்பாண்ட வேலைகளுக்கு உகந்த அலங்காரமாகும்.

புராதன பூக்களின் வகைகள்

சப்பு மலர்

தாழம்பூ

கடும்புமலர்



மல்லிகைமலர்

சீனமலர்



அன்னாசிமலர்

தாழம்பூ



கதறுமலர் அன்னாசிமலர்

கத்தரிமலர்

நாகதாளிமலர்

திருக்குதலை

லியவல

சீனமலர் மரம்



வேல் பொத்த்

தீச்சுடர் (கினிதல்ல)



பத்மதாமரை அலங்காரம்

பாய்பின்னல் அலங்காரம்

சிங்கள மாதிரிக் கற்பனை வடிவங்கள்

முகமூடி

இவ்வடிவம் நாகமுகமூடியென அழைக்கப்படுகின்றது. நாகபாம்பு படம் எடுப்பது போல் தலைகள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்உருவம் நாகராசன் எனக்குறிக்கப்படுகின்றது. இவ்வகையான மூகமூடி செய்ய அம்பலாங்கொடை சிறந்த இடம்.

கிபிகி முகம்

முகம் – முதலை – பல் குரங்கு, காது – பன்றி போன்றவற்றின் தொகுப்பாய் இவ்உருவம் சிங்கவாயைக் கொண்டது. மேல் சிகரப் பகுதி அலங்காரங்கள் கொண்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. மரத்தால் செய்யப்பட்ட பயங்கர உருவாகும். பௌத்தமக்கள் தமது விகாரை தோரணத்தில் வைத்து அழகு படுத்துவர்.

கஜசிங்கம்

இவ்உருவத்தின் உடல் அமைப்பு சிங்கத்தின் தோற்றமும் தலைப்பகுதி யானையின் பகுதியாகவும் காணப்படுகின்றது. இவ் உருவம் கண்டிய காலத்தைச் சேர்ந்தது. யாப்பஹுவ, லங்காதிலக விகாரைகளில் இவ் உருவம் காணப்படுகின்றது.

அத்கந்த லிகினியா

எத்லிகனியர் எனவும் அழைக்கப்படும், யானைத்தலையும் கழுகின் உடலைக் கொண்டும் காணப்படுகின்றது. இரு கால்களிலும் இரு யானைகளைத் தூக்கியவாறு காணப்படுகின்றது. கண்டி, கதிர்காமம் போன்ற இடங்களில் சுவர்களில் வரையப்பட்டுள்ளது.

சுரபெந்தா

பறவை அமைப்பைக் கொண்டது. தலையானது. சிங்க உருவமும் கழுத்து அன்னப் பட்சியின் அமைப்பும் உடலில் மீன் செதிலும் கொண்டு காணப்படுகின்றது. கண்டிய காலத்துக்கு உரியது. ரதிவிகாரை எம்பக்கே போன்ற ஆலயங்களில் இவற்றைக் காணமுடியும்.

நரசிங்கம்

வீரத்திற்கும் தேசிய தன்மைக்கும் இவை பயன்படுத்தப் படுகின்றன. தலைமயிர் பின்புறம் விழுந்து காணப்படும். மயிர்கள் சிலிர்த் தன்மையைக் கொண்டு கோபதன்மையை கொண்டவையாக இவை அமைந்துள்ளது. கட்டிடம், இரும்பு வேலைகளுக்கு சிறந்தது.



மகரம்

முதலை உருவையும் யானை போன்ற துதிக்கையும் கொண்டு பின்பகுதி அன்னப் பறவையின் வால்போல், காணப்படுகின்றது. திருவாசி, கதவு நிலைகளில் இவ் உருவம் காணப்படுகின்றது. மிகவும் பழைய மகரம் 8ம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயராம கட்டிடத்தில் உள்ளது.

அன்னச் சோடி

இருதலைப்பட்சி அன்னம் என்று அழைக்கப்படுகின்றது. நேருக்கு நேராக இரண்டு அன்னங்களின் தலைகள் காணப்படும். நீதியை புகட்டும் சின்னமாக காணப்படுகின்றது. கதவு வேலைகளுக்கு சிறந்த அலங்கார உருவாகும்.

இருதலை கழுகு

இவ் உரு பேருண்ட பக்ஷியா என அழைக்கப்படுகின்றது. கழுகு உருவைப் போன்ற ஒரு உடலில் இரு தலைகளைக் கொண்டு காணப்படுகின்றது. பித்தளைப் பாத்திரங்களுக்கு அலங்காரம் அமைக்க சிறந்தது. இது ரஷ்யாவின் குடியரசுச் சின்னமாகவும் விளங்குகின்றது.



நாரிலதாவல

இது ஒரு கற்பனைக் கொடி அலங்காரம். இக் கொடியின் பூ அழகிய பெண் உருவமாகும். இது சிங்கள அலங்கார அமைப்பு ஆகும். இப் பெண் பூ இருபக்க கொடிகளை பிடித்த வண்ணம் காணப்படும்.

கைபிடிவரிசை

விகாரையில் ஏறுவதற்கு இருபகுதிகளிலும் கைப்பிடியாக இவை காணப்படுகின்றன. இது கருங்கற்களால் செதுக்கப்பட்டுள்ளது. யானைவாயில் இருந்து வருவது போல் ஓர்வளைவு காணப்படும். நடுவில் உசார்நிலையில் சிங்கம் காவல் புரிவதைக் காட்டுகின்றது. இது அனுராதபுரக் காலத்து சிற்பமாகும்.



மீன் வடிவம்

'மத்சயா' என அழைக்கப்படுகின்றது. இவ் அடையாளத்தினை விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாக புராணங்கள் கூறுகின்றன. இவ் வடிவம் 'பற்றிக்' 'மட்பாண்டம்' போன்றவற்றின் அலங்காரமாக பயன்படுத்தப்படுகின்றது.

நடராஜர் சிலை

இவ்வடிவம் இந்துப் பண்பாட்டைச் சேர்ந்தது. வெண்கலத்தால் ஆன இச்சிலை காலைத்தூக்கியவாறு நடனமாடும் அமைப்பிலானது. இது ஐந்தொழில் செய்யும் தோற்றம் ஆகும்.

காந்தாரபுத்தர்சிலை

காந்தார முறையில் அமைந்த புத்தர் சிலையாகும். தலை நீண்டிருக்கும். சுருண்ட மயிர் அமைப்பு மென்மையான மயிர் சீவிய தலையமைப்பை உடையது.



சித்திர உபகரணம்

சித்திர வேலைக்கு சித்திரக்கலைஞனால் பாவிக்கப்படும் உபகரணம்.



சூரியன்

இவ்வுருவம் சூரியனாகும். இவ் வடிவத்தினை சௌர சமயத்தின் தெய்வமாக வழிபடுவர்.

கலசம்

இவ்வடிவம் கலசம் ஆகும். இதனை கடம், புங்கலசம் என்றும் அழைப்பர். கருங்கல்லால் செதுக்கப்பட்டுள்ளது. பூரண கும்பமென்றும் அழைப்பர். செல்வச் செழிப்பை காட்டுவதற்கு இதனை பயன்படுத்துவர்.



சிங்கம்

இலங்கையின் தேசியக் கொடியின் சின்னமாகும். வீரத்திற்கு உரித்தானதாக காணப்படுகின்றது. சிங்களா கலைஞர்கள் 13 விதமான சிங்க அலங்கார தோற்றங்களை அமைத்துள்ளனர்.

தாது கோபமும் அதன் அலங்கார அமைப்புக்களும்

பௌத்த மதத்தின் முக்கிய சின்னமாக தாது கோபங்கள் காணப்படுகின்றன. பௌத்த கலாச்சரத்தின் சமய வழிபாட்டுத்தலமாகவும் காணப்படுகின்றன. தாது கோபங்களில் புத்த பகவானின் உறுப்புக்களை (தாதுக்கள்) வைத்து உருவாக்குவது தனிச்சிறப்புடையது. தாது கோபம் முக்கியமாக மூன்று பகுதிகளைக் கொண்டது.

(i) அடித்தளம்
(ii) அண்டம்
(iii) தூபி

அடித்தளப் பகுதியில் சுவர் வேதிகையாக 1ம் சுற்றுப் பிரகாரமும் 2ம் சுற்றுப் பிரகாரமும் காணப்படும். இங்கு 3ம் அலங்கார வரிசை அமைப்புக்கள் ஒன்றன் மேல் ஒன்றாகக் காணப்படும். கீழ் வரிசை பிரதட்சண பாதையாகவும் அதன் மேல் உள்ள வரிசைகளில் புஷ்பங்கள் வைக்கப்பட்டு இருந்தமையால் புஷ்பபீடம் புஷ்பதானம் எனப்பட்டன.

அண்டப்பகுதியானது அடித்தளத்துக்கு மேல் உள்ள பகுதியாகும் செங்கற்களால் கட்டப்பட்டுச் சுண்ணாம்பால் பூசப்பட்டுள்ளது. இப் பகுதியானது பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றது. அண்டமானது புத்தர் தேவலோகம், நாகலோகம், பூலோகம் ஆகிய மூன்றையும் வென்றார் என்பதைக் குறிக்கின்றது.

அண்டப்பகுதிக்கு மேல் காணப்படும் பகுதி தூபியாகும். இப்பகுதி 5 பகுதிகளைக் கொண்டது அவை முறையே பெரிய பகுதி கதறஸ் கொட்டுவ அல்லது சதுரக் கோட்டம் அதற்கு மேல் உள்ள பகுதி தேவதா கொட்டுவ அதற்கு மேல் உள்ள பகுதி கோட்டம் ஆகும். கோட்டத்தில் சத்த அல்லது தூபி அமைக்கப்படும். இச் சத்த பகுதிக்கு மேல் சிகரம் காணப்படும். சிகரத்தைக் கரல்ல என அழைப்பர். கரல்ல பகுதியைச் சுற்றி வேதிகைகள் சில இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன. மன் தவகிரி அல்லது மிதூரிகிரிய, இந்தியாவில் உள்ள சாஞ்சி தாது கோபத்தில் இவை காணப்படுகின்றன.

அடித்தளப் பகுதியைச் சுற்றி முதலாம் சுற்று வீதி காணப்படுகின்றது. இங்கு சந்திர வட்டக்கல் நாக ராஜ துவாரபாலக வடிவங்கள் காணப்படுகின்றன. படிகளின் இரு மருங்கிலும் பிடித்து ஏற யாழி, யானை போன்றவற்றின் கலையம்சம் பொருந்திய கைபிடிகள் காணப்படுகின்றன. தாது கோபத்துக்கு அண்மையில் புத்தரது சீடர்களின் தியான வடிவங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை " பிலிமகே" என அழைப்பர். அத்துடன் தர்மசாலை உபதேச மண்டபம் அரசமரம் பொக்குண (குளம்) போன்றவை காணப்படும்.

தாது கோப அமைப்பு



தாது கோபவகைகள்

தாது கோபங்கள் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவ் வடிவங்கள் 7 வகைகளைக் கொண்டவை. இவற்றின் சிங்களப் பெயர்களும் கீழ் தரப்படுகின்றன.

1. நீர்க்குமிழ் வடிவம்
(பபுலாகார வடிவம்)
இவ்வடிவத்தில் இலங்கையில் ரூவான் வலி சாய,
இந்தியாவில் சாஞ்சித் கோபம்

2. நெற்குவியல் வடிவம்
(தானியக்கார வடிவம்)
அனுராதபுரம் தூபராம, களனி விகாரை

3. மணி வடிவம்
(கண்டாகார வடிவம்)
தூபராம தாதுகோபம், மகியங்கனை தாதுகோபம்.

4. குட வடிவம் (பானை வடிவம்)
(கட்டாகார வடிவம்)
மிரிசவடி, நகாவேகெர தாது கோபம்

5. தாமரை வடிவம்
(பத்மாகார வடிவம்)
இவ்வடிவம் இலங்கையில் இல்லை.

6. நெல்லிக்கனிவடிவம்
(அம்லாகார வடிவம்)
இவ்வடிவம் இலங்கையில் இல்லை

7. பானை மூடிய வடிவம்
பாத்திராகார வடிவம்
(இவ்வடிவம் இலங்கையில் இல்லை)

பௌத்த ஆலயங்களில் காணப்படும் முக்கிய மண்டபங்கள்.

1. பிலிமகே – புத்தரதும் சீடர்களினதும் திருவுருவங்கள் வைக்கப்படும் இடம்
2. தர்ம சாலை – உபதேச மண்டபம்
3. சங்கிரமம் – பௌத்த சந்நியாசிகள் வசிக்கும் இடம்
4. உபதேச மண்டபம் – விரத இல்லம்
5. முறகே – காவல் இல்லம்
6. போதி கோட்டம் – வெள்ளரசு நிலையம்

புத்தர் சிலைகள் உணர்த்தும் முத்திரைகள்

புத்தர் சிலைகள் செய்வதற்குப் பல பொருட்கள் ஊடகமாகப் பயன்படுத்தப் படுகின்றன. கருங்கல், செங்கல், சுண்ணாம்பு, மரங்கள், உலோகங்கள், யானைத்தந்தம் போன்றனவாகும். இச்சிலைகள் இரு இருந்த நிலை ஆசனங்களைக் கொண்டது. அவை.

(i) பத்மாசனம் (யோகாசனம்)

(ii) வீராசனம் (சமாதி நிலை)

இவ் ஆசனங்களைத்தவிர ஒவ்வொரு சிலைகளும் ஒவ்வொரு முத்திரைகளை உணர்த்துகின்றன.

i அபயம் அளிக்கும் முத்திரை ii தர்ம சக்கர முத்திரை iii பூமிஸ்பரண முத்திரை ix பரி நிர்வாணமுத்திரை v பரதுர்க்க முத்திரை vi விதர்க்க முத்திரை vii தான்ய முத்திரை viii வரத முத்திரை ix அபிசேக முத்திரை x அஞ்சலி முத்திரை xi புத்த பாத்திர முத்திரை xii மகாகருணை முத்திரை xiii வியாசயான முத்திரை xiv திரிலோக விஜய முத்திரை.

முத்திரைகளின் சில வடிவங்கள்

தர்ம உபதேச நிலை

பூமி பஞ்ச முத்திரை

ஆனந்த முத்திரை

விதர்க்க முத்திரை

பரதுர்க்க நிலை

பரதியான நிலை

அபய முத்திரை

புத்த சிலை அமைக்கும் போது காந்தார (மலைவடிவம்) மதுராகார (மதுரை சிலை வடிவம்) ஆந்திர (அமராவதி வடிவம்) குப்த (குப்த அரச வடிவம்) போன்ற சிற்பக் கலைகளில் புத்த சிலைகள் அமைக்கப் படுகின்றன.

மதக் கோவில்கள்

இலங்கையில் நான்கு மதங்களின் கோவில்கள் காணப்படுகின்றன. அவற்றின் அமைப்புக்கள் சிறப்பு என்பன பற்றி அறிய வேண்டிய அவசியம் மாணவர்களுக்கு உண்டு.

i. பௌத்தமதக் கோவில் (விளக்கப்பட்டுள்ளது)
ii. இந்து மதக் கோவில்
iii. கிறிஸ்தவ மதக் கோவில்
iv. இஸ்லாம் மதக் கோவில்

இந்து மதக் கோவில்கள்

இந்து மதக் கோவில் மூன்று வகையான கட்டிட அமைப்பைக் கொண்டுள்ளது.

i. உத்தர மட்ட வேலை
ii. இரட்டைப் பஞ்சாங்க வேலை
iii. முகபத்திர வேலை

இம் முக்கிய மூன்று பகுதிகளுள் மேலும் ஆறு பகுதிகள் அடங்கப் பெற்றுள்ளன. அவை –

(1) உபபீடம் (2) அதிர்ஷ்டானம் (3) பாதவர்க்கம் (4) பிரஸ்தளம் (5) சிகரம் (6) தூபி ஆகும். இவை ஒவ்வொன்றினதும் பிரதான பகுதிகளைப் பார்ப்போம்.

உபபீடமானது பிரதம வரி, உபானவரி, கண்டவரி, பண்டிகைவரி என்னும் பிரிவுகளையும் அதிர்ஷ்டானம் கனவரி, அதிர்ஷ்டானவரி, என்னும் பிரிவுகளையும் பாதவர்க்கம் வேதிகைவரி, கால்வரி, போதிகைவரி, தேவகோட்டம் ஆகியவற்றையும் கொண்டுள்ளது. மேலும் பிரஸ்தளம் உத்திரவரி, கம்புவரி, எழுதவரி, கபோதவரி, யானைவரி, கூண்டு என்ற வேலைப்பாடுப் பகுதியையும் சிகரம் அதாவது விமானப்பகுதி கண்டவரி, இடைக்கட்டு நாகபந்தவரி பண்டிகை அல்லது யாளி வரிமானம் மாலைக்கட்டு கண்ணாடிக் கட்டிடம் காபத்மம் பகுதிகளையும் தூபி கண்டம் அரடா, குடம் அலர், கதலிப்பூ ஆகிய பகுதியையும் கொண்டது.

கோவிலினுள்ளே மூர்த்தி இருக்கும் மண்டபம் மூலஸ்தானம் அல்லது கருப்பகிருகம் எனவும் அதில் இருந்து இராஜகோபுரம் வரை முறையே அர்த்த மண்டபம், அந்தாரன மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம் ஸ்தம்ப மண்டபம் அனுமணி மண்டபம் என்பன காணப்படுகின்றன. இவற்றைத் தவிர கோவிலுக்குள்ளே திருமஞ்சனக்கிணறு, மடைப்பள்ளி களஞ்சிய அறை, வாகன சாலை, தீர்த்தக்குளம், வசந்த மண்டபம், யாகசாலை உற்சவ மூர்த்திகளின் மண்டபம், கல்யாண மண்டபம், போன்றவையும் நந்தவனமும் காணப்படும்.

சிற்பிகள் கோயிலை உடம்பாக ஒப்பிட்டு தூபியை தலை உச்சியாகவும் சிவலிங்கத்தை முகமாகவும் அர்த்த மண்டபத்தை கழுத்தாகவும் துவாரகபாலகர் நிற்கும் இடம் இரு தோள்களாகவும், கொடிமரப்பகுதியை முண்டமாகவும் நந்தி தொப்பிளாகவும் பலிபீடம் கும்பமாகவும் கொடிமரம் முதுகுத் தண்டாகவும் நடராஜர் இதயமாகவும் அம்பிகை மண்ணீரலாகவும் காணப்படுகின்றன மூர்த்திகளின் இருப்பிடமாக திரு நீறு தரிக்கும் இடங்கள் விளங்குகின்றன.



இலங்கையில் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்கள்

திருக்கேதீஸ்வரம் :– மன்னார் மாவட்டத்தில் உள்ளது. 12ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. பாண்டிய சிற்பமுறையால் அமைக்கப்பட்டது. தேவாரப் பாடல் பெற்ற தலம்.

கோணேஸ்வரம் :–
திருகோணமலையில் உள்ளது. பாண்டிய சிற்பமுறையில் அமைக்கப்பட்டது குளக் கோட்ட மன்னனால் கட்டப்பட்டது. தேவாரப்புகழ் பெற்றதலம்

முனீஸ்வரம் :– சிலாபத்தில் உள்ள சிவதலம்

நகுலேஸ்வரம் :– கீரிமலையில் உள்ள சிவதலம்.

பொன்னம்பலவாணேஸ்வரர் :– கொழும்பில் உள்ளது முற்று முழுதாகக் கருங் கற்களால் அமைக்கப்பட்டது.

சேர். பொன். இராமநாதன் கட்டு வித்தார் பாண்டிய பல்லவ சிற்பமுறையில் அமைந்தது

சட்டநாதர் ஆலயம் :– யாழ்ப்பாணத்தில் உள்ளது. விஜயநகர் சிற்ப முறையில் அமைக்கப்பட்டுள்ளது

நல்லூர் கந்தசுவாமி கோவில் :– யாழ்ப்பாணத்தில் உள்ளது. சங்கபோதி புவனேகபாகு என்னும் செண்பகப் பெருமாள் என்பவரால் கட்டப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் :– 8ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கலிங்கதேச மன்னனின்மனைவியானமாருதப் புரவீக வல்லியின்விருப்பத்திற்காக அமைக்கப்பட்டது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் :– யாழ் குடாநாட்டின் தென் மேற்கில் உள்ள தீவான நயினாதீவில் உள்ளது. நாகம் பூசித்த வரலாற்றுத்தலம். பாண்டிய சிற்ப முறையில் அமைக்கப்பட்டது. கோவில் வரலாற்றுடன் சிற்ப வேலைகள் நிறைந்த அழகிய தேர் உண்டு.

கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயம் :– மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளது. இவ்வாலயம் கொக்கட்டிச் சோலையில் அமைந்துள்ளது

ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் :– முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டான் கிராமத்தில் உள்ளது. சுயமாகத் தோன்றிய லிங்க வடிவம் இங்கு காணப்படுகிறது

கிறிஸ்தவ தேவாலயங்கள்

கி. பி. 3ம் நூற்றாண்டுக்கு பின் கிறிஸ்தவ தேவாலயங்கள் தோன்றின. போர்த்துக்கேயரின் தேவாலயங்கள் உயர்ந்த முகப்பை கொண்டன. பைசாந்திய அல்லது ரோமானிய கலாச்சார சின்னங்களைக் கண்ணாடித் துண்டுகளில் அலங்காரங்களாகப் பதித்துள்ளனர். கோயில் மணி அமைப்புக்களிலும் காணப்படுகின்றன. கோபுர அமைப்புக்கள் பல்வேறு வடிவமான வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் பள்ளிவாசல்கள்



இலங்கையில் பள்ளிவாசல் அமைப்பு கி. பி. 7ம் நூற்றாண்டு காலப் பகுதியில் உருவாக்கப்பட்டது. இப்பள்ளிவாசல்களில் சிற்ப வேலைப் பாடுகளோ விக்கிரகங்களோ இருப்பதில்லை. இவர்களது ஆகமநூலான குர்ஆன் பலிபீடத்தின் ஒரு பகுதியில் வைக்கப்பட்டு இருக்கும். பெண்கள் பள்ளிவாசலுக்குச் செல்ல முடியாது.

இலங்கையின் கலை வளர்ச்சிக் காலங்கள்

எமது நாட்டின் கலைவளர்ச்சிக் காலங்கள் ஒரே காலகட்டங்களில் நடைபெறவில்லை. இவை எம் நாட்டுடன் தொடர்புடைய இந்தியாவின் உறவுகளோடு தொடர்புடையனவாக விளங்குகின்றன. இந்தியாவை ஆண்ட அசோக மன்னனின் ஆட்சிக்காலத்தில் பௌத்தமதத்தின் செல்வாக்கு இலங்கைக்கும் பரவியது. மகிந்த தேரோ, சங்கமித்தை போன்றவர்கள் பௌத்த மதத்தைப் பரப்பும் பணியால் இங்கு வந்தமையும் இலங்கை அரசனான தேவநம்பிய தீசன் இவர்களுக்கு ஆதரவு அளித்தமையும் வரலாறு கூறுகின்றது. இவ்வாறு தொடங்கிய உறவு அரசியல், மதம், கலை, கலாச்சாரம், மொழி, பண்பாடு என்று இரு நாடுகளுக்கிடையில் காணப்பட்டன. இவ் உறவுகள் இந்தியாவின் உள்நாட்டில் ஏற்பட்ட ஆட்சிக்கால நாகரீகங்கள், கலைகள் என்பன காலத்துக்குக் காலம் மாறும் போது இங்கும் ஏற்பட்டன. இவ்வாறு ஏற்பட்ட வளர்ச்சிகளை 4 வகையாகப் பிரிக்கலாம்.

(1) அனுராதபுரக்காலம்
(2) பொலநறுவைக்காலம்
(3) கண்டிக்காலம்
(4) கொழும்புக்காலம்

அனுராதபுரக்காலம்

இலங்கையின் முதல் தலை நகரமாக விளங்கியது அனுராதபுரமாகும். இங்குதான் ஆரம்ப வளர்ச்சி வேர் ஊன்றியது. கி. பி. 247ம் ஆண்டு மௌரிய சிற்ப காலத்தில் தொடங்கியது இக்காலகட்டத்தில் மௌரிய சிற்பமுறை, ஆந்திர சிற்பமுறை, குப்த சிற்பமுறை, பல்லவ சிற்பமுறை ஆகியவற்றின் செல்வாக்கு கட்டிடக்கலை, சிற்பக்கலை ஓவியக்கலை போன்றவற்றில் காணப்பட்டன.

அனுராதபுரத்தில் காணப்படும் கலையம்சங்கள்

தூபராம தாதுகோபம்



மிகப் பழமை வாய்ந்த பௌத்த ஆலயங்களில் முதன்மை பெறும் கட்டிடம் இதுவாகும். அசோக மன்னனின் காலத்துக்குரியதாகக் கருதப்படும் இத்தாது கோபம் தேவ நம்பியதீச மன்னனால் கட்டப்பட்டது. புத்தரின் வலது கால் எலும்பை வைத்துக் கட்டப்பட்டமையால் சிறப்புப் பெற்றது 1842ம் ஆண்டில் மணிவடிவில் திருத்தி அமைக்கப்பட்டது. இதன் அடி விட்டமானது 59 அடியாகும். கருங்கல் செங்கல், சுண்ணாம்பு என்பவற்றைக் கொண்டு மௌரிய சிற்ப முறையில் அமைக்கப்பட்டுத் தாது கோபத்தைச்சுற்றி நான்கு வாசற் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந் நான்கு வட்டத்தில் முதலாவது வட்டத்தில் 22 அடி 10 அங்குல உயரம் கொண்ட 52 தூண்களும் இரண்டாவது வட்டத்தில் 21 அடி 3 அங்குல உயரம் கொண்ட 36 தூண்களும் மூன்றாவது வட்டத்தில் 19 அடி 9 அங்குலங்கொண்ட 40 தூண்களும், நான்காவது வட்டத்தில் 16 அடி கொண்ட 48 தூண்களும் கருங்கற்களால் அமைக்கப்பட்டு குப்த சிற்ப முறையில் அழகிய வேலைப் பாடுகளுடன் காணப்படுகின்றன.

ரூவான் வெலிசய தாது கோபம்

- அனுராதபுரம்



மகாதூபம் என அழைக்கப்படும் இத்தாது கோபம் கி.மு. 102–137 துட்டகை முனு அரசனால் கட்டப்பட்டது இத்தாது கோபம் நீர்க்குழி வடிவில் அமைக்கப்பட்டு புத்தரின் காறையென்பு வைத்து நான்கு திசைகளிலும் வாசல்கூடம், கற்படிகள் சிங்கஉருக்கள் அமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. இத்தாது கோபத்தை நிர்மாணித்த துட்டகைமுனு வேலை முடியமுன் மரணப் படுக்கையில் இருந்தமையால் இவனது சகோதரன் சத்தாதிஸ்ஸ இதனை முழுமையாக்கினான் இங்கு விகார மகாதேவியின் உருவம், வெஸ்ஸன்தர ஜாதக்கதை, அரசமரம், புத்தர் சிலை, சீடர்கள் என்பவற்றை இந்திர குப்ததேரர் ஓவியமாக வரைந்துள்ளார். இத்தாது கோப கதவுகளில் பூ இதழ்கள், அன்னங்கள் யானைகள் எழுத்துக்கள், நாகங்கள் செதுக்கப் பட்டுள்ளன. பிற்காலத்தில் நிசங்க மல்லன் என்னும் அரசனால் திருத்தி அமைக்கப்பட்டது.

அபயகிரி விகாரை - அனுராதபுரம்



கிரி என்னும் துறவியின் சமாதியை இடித்து அவ்விடத்தில் கி. மு. 104 – 76ல் வாலகம்பாகு என்னும் மன்னனால் 380 அடி உயரத்தில் இவ்விகாரை கட்டப்பட்டது. இவ்விகாரையில் " அக்ரகன்ய " என்னும் காவலர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. பிற்காலப்பகுதியில் கஜபாகு மன்னன் நான்கு வாசல் அமைத்து கனிடு திஸ்ஸ மன்னனின் சிலையை அமைத்துள்ளான். இவ் விகாரையைப் பற்றி சீனயாத்திரிகனான பாஹியனின் குறிப்பேட்டில் விகாரையில் தங்க முலாம், வெள்ளி முலாம் பூசப்பட்டு இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

புத்தரின் சமாதி நிலை - தொழுவில அனுராதபுரம்

புத்த பெருமானின் இருந்த வடிவமான சமாதி வடிவம் அனுராதபுரத்தில் உள்ள தொழுவில என்னும் இடத்தில் காணப்படுகின்றது. இலங்கையில் காணப்படும் புத்தர் வடிவங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இவ்வடிவம் யோக நிலைக்குரிய முகபாவமும் கண்கள் மூக்குநுனியைப் பார்த்த வண்ணம் சாந்தமும் கருணையும் கொண்ட சாந்த சொரூபியாகத் தியானத்தில் அமர்ந்துள்ளார் இவ்வடிவத்தின் மேல் அங்கியானது நெருங்கிய வரிகளால் காணப்படுகின்றது. இச்சிலை கருங்கல்லை ஊடகமாக வைத்து குப்த சிற்ப முறையில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இவ்வடிவம் கொழும்பு நூதனசாலையில் வைத்து பேணப்படுகின்றது.

புத்தரின் சமாதி நிலை - அவுகண - அனுராதபுரம்

அனுராதபுரம் கலாவெவ என்னும் இடத்தில் மேற்குத்திசையில் இரண்டு மைல் தூரத்தில் அவுகண புத்தர் நின்ற நிலை வடிவம் காணப்படுகின்றது. இவ்வடிவம் தியான நிலை கொண்டது. வலதுகரம் அபயம் அளிப்பது போலவும் இடது கரம் அங்கியைத் தாங்கியவண்ணம் விரிந்த தாமரை மலர் மேல் 46 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கருங்கல்லை ஊடகமாகவும் பின்னணியாகவும் கொண்டு காணப்படும் இவ்வடிவம் தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்டது எனக் கூறப்படுன்றது. சில கர்ண பரம்பரை கதைகளில் 1ம் பராக்கிரமபாகுவால் அமைக்கப்பட்டது எனக் கருதப்படுகின்றது. இச்சிலையை ஆராய்ந்த பரண விதான 5ம் 8ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக்கருத்து தெரிவித்துள்ளார்.

சந்திரவட்டக்கல் - அனுராதபுரம்



தாது கோபங்கள், விகாரைகள், ராணி மாளிகை ஆகியவற்றின் வாசற்படிகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அரைவடிவ கருங்கல் படியே சந்திரவட்டக்கல்லாகும். அனுராதபுரக்கால கல்லானது 13ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. இக்கல்லில் அரைவட்ட தாமரை வடிவம் முதல் வரிசையிலும் அடுத்து அன்னங்களின் வரிசையும் அதையடுத்து இலை, கொடிவரிசையும், அதனை அடுத்து மிருக வரிசையும் (மிருக வரிசையில் யானை, யாழி, குதிரை, சிங்கம், எருது), இறுதி வரிசையில் தீச்சுடரும் காணப்படுகின்றன. குப்த சிற்ப முறையில் தாழ்புடைப்பு சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது " பி சோ" மாளிகை, " மஹசென்" அரண்மனை வாசல்களில் காணப்படும் சந்திரவட்டக்கல் கலையம்சம் கொண்டவையாகவும் உலக புகழ் பெற்றவையாகவும் காணப்படுகின்றன. சிங்களத்தில் இக்கல்லை " சந்தகடபான " என அழைக்கப்படுகின்றது.

காவற்சிலை ரத்தின - பிரசாத - அனுராதபுரம்)

அனுராதபுரத்தில் இரத்தின பிரசாத என்னும் இடத்தில் காணப்படும் காவற்சிலை மிக உயர்ந்த கலையம்சத்துடன் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிலை நாகராசன் வடிவமானது. தலை, உடல், கால், என்பன இவற்றுக்கு ஏற்றவாறு வளைந்து காணப்படுகின்றது. தலையில் வேலைப்பாடு கூடிய கிரீடமும் பின்புறத்தில் 7 நாக படங்களும், மார்பில் ஆபரணங்களும் இடது கையில் கலசமும் வலது கையில் தென்னம் பூவையும் தாங்கிய வண்ணம் அமைந்துள்ளது. சிலைக்குக் கீழ் இருபுறமும் குள்ள மனிதச்சிலை இடையளவில் காணப்படுகின்றது. காவற்கல்லின் நாற்புறமும் சிற்ப வேலைப்பாடுகள் கொண்டு காணப் படுகின்றன. இக்காவற் சிலை உலகிலே சிறந்தது எனக் கூறப்படுகின்றது.

காவற்கல்



காவற்கல் என்பது கொரவக்கல். அசையாமல் இருப்பதற்காகப் படிகளின் இரு பக்கங்களில் அமைக்கப்பட்டது. காலம் செல்லச்செல்ல காவற்கல்லில் நாகரூபம், மயில் நாகராஜவடிவம், மனித உருவம் என்பன செதுக்கப்பட்டன. இம்மனித உருவங்கள் நகைச்சுவை உடையனவாகக் காணப்பட்டன. அனுராதபுரக் காலத்தில் இவற்றின் செல்வாக்கு கூடக்காணப்பட்டது. துவாரபாலகர் வடிவமானது. பாம்பின் உருவம் கையில் காவலுக்குரிய தடியும், காதணி அணிந்தும் பார்ப்போர் பயப்படும் அழகில் இவை காணப்படுகின்றன.

இசுறு முனியவிகாரை

அனுராதபுரக்கால இவ் விகாரையானது மிகவும் சிறப்பு வாய்ந்தனவையாகக் காணப்படுகின்றது. இங்கு ஐந்து வகையான சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.

(1) புத்த விகாரைகள்
(2) காதலர் சிலை
(3) குதிரைத்தலையும், மனித உருவமும்
(4) யானையின் உருவப்படச் சிலைகள், ஓவியங்கள்
(5) அரசனும், அரசியும்.

புத்தவிகாரைகள்

இங்குள்ள தேசவிறி, இசரமனராமி ஆகிய கோயில்கள் தேவநம்பிய தீசமன்னனால் கட்டப்பட்டன. இதன் வாயில்களில் அழகிய தோரணங்கள் உண்டு. இங்குள்ள மாளிகையில் நடுப்பகுதியில் கருங்கல்லிலான புத்தர் சிலையுண்டு. இச்சிலை துயில் கொள்ளும் நிலையில் உள்ளது. அத்துடன் வாமனரூப களியாட்ட சித்திரங்களான கர்ம, தர்ம பாவங்களைச் சித்திரிக்கும் சித்திரம் சில உருவங்கள் ஆடுவது போலவும், பாடுவது போலவும், உடுக்கு அடிப்பது போலவும், சங்கு ஊதுவது போலவும், களியாட்ட சித்திரங்களைக் காணலாம். மகிந்தனின் சிலை வைத்திருக்கும் அழகிய தாபத்தையும் காணலாம். இங்குள்ள சிற்பங்கள், உருவங்கள் இந்தியாவில் உள்ள மகாவலிபுர கங்கார கலைகளைச் சார்ந்ததென டாக்டர் ஆனந்த குமாரசாமி கருத்து தெரிவித்தார்.

காதலர் சிலை - இசுருமுனிய - அனுராதபுரம்



உயிரேட்டமான கலையம்சம் கொண்ட இச்சிலை கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இவை 6ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது. இவ் உருவங்கள் ஆணின் தொடையில் பெண் இருப்பது போல் காதல் உணர்வை வெளிப்படுத்துகின்றது. மற்றும் இச் சிலைபற்றிக் கூறுவதாவது காதலன் ஓர் போர் வீரன் என்றும் அவனது இடுப்பில் வாள் காணப்படுவதாகவும் தோள்கள் இரண்டும் பெருத்தும், நிமிர்ந்த மார்பும், ஆடை அணிகலன்கள் இருப்பது வீரனுக்கு உரியதாகக் கணிக்கப்படுகின்றது. போர்க்களம் திரும்பியவன் தன் காதலியுடன் சேர்ந்து இருப்பதாகக் கூறப்படுகின்றது சிலர் சிவன் பார்வதி என்றும், சாலிய மன்னன் அசோக மாலா என்றும் கூறுகின்றனர் எது எவ்வாறாயினும் குப்த சிற்ப முறையில் அமைக்கப்பட்ட இச்சிலை அபிநயச்சிறப்பும் உயிர்த்தன்மை கொண்ட தாகவும் ஒளி வட்டம், குறியீட்டுத் தன்மை, வாழ்க்கைப்பற்று! மனித உருவ அமைப்பு என்பன உணர்ச்சி ததும்ப செதுக்கப்பட்டுள்ளது.

குதிரை தலையும் மனித உருவமும் - இசுர முனிய - அனுராதபுரம்



இசுர முனியாவில் காணப்படும் இச்சிற்பம் 6ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். குப்த சிற்ப முறையில் அமைக்கப்பட்டுள்ளது. போர் வீரன் ஒருவன் தன் குதிரையின் பக்கத்தில் இளைப்பாறுவது போல் உள்ளது. வீரனானவன் கம்பீரமாக இருப்பது போலவும் வீரனுக்குரிய சாயல் இச்சிற்பத்தில் காணக் கூடியதாகவுள்ளது.

யானைக்கூட்ட சிற்பம் - இசுரமுனிய, அனுராதபுரம்



இச்சிற்பம் பல்லவ குப்த சிற்ப முறையைப் பின் பற்றிச் செதுக்கப்பட்டுள்ளது. திசா குளத்தின் நீர் எடுக்கும் இடத்தில் நிரம்பி வழியும் தாடகதின் சுவரில் இவ் யானை உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யானைகள் நீர் விளையாட்டில் ஈடுபடுவதைக் காட்டுகின்றது. குளத்தில் தண்ணீர் வற்றும் போது யானை வடிவங்கள் வடிவாகத் தெரியும்.



அரசனும் அரசியும்

இவ் கல் ஓவியம் அரசனும் அரசியும் கோயிலுக்குப் போவது போல் செதுக்கப்பட்டுள்ளது. இதன் மத்தியில் அமைந்த ஆண் உருவம் துட்டகைமுனு என்னும் சாலிய குமரன் என்றும் பெண் அசோகமாலா என்றும் கூறப்படுகின்றது பின் புறத்தில் உள்ளவர்கள் தோழியர்கள் என்று கருதப்படுகின்றது.

அனுராதபுர சுவர் ஓவியங்கள்

அனுராதபுரகால சுவர் ஓவியங்கள் பின்வரும் இடங்களில் காணப் படுகின்றன

(1) தந்திரிமலை கற்குகை ஓவியம்
(2) வெஸ்ஸகிரிய கற்குகை ஓவியம்
(3) திபுலாகல கற்குகை ஓவியம்
(4) கந்தக சைத்திய சுவரோவியம்
(5) மகியங்கனைச் சுவரோவியம்
(6) சிகியா கற்குகை ஓவியம்

மேற்கூறப்பட்ட ஆறு வகையான இடங்களில் காணப்படும் சுவரோவியங்களில் சிகிரியா சுவர் ஓவியமே சிறப்புப் பெறுகின்றது. கந்தசைத்தியவில் உள்ள கரபத்துள் ஓவியம் சிகிரிய பெண்களைப் போன்ற வகையில் வரையப்பட்டுள்ளது. இங்கு உள்ளூரில் கிடைக்கும் வர்ணங்களைக் கொண்டே இவை தீட்டப்பட்டுள்ளன. இவ் ஓவியங்கள் கி. பி. 5–12 வரையிலான காலப்பகுதியாகும்.

சிகிரியா சுவர் ஓவியம்
சிகிரியாக் குன்று



சிங்ககிரி என அழைக்கப்படும் சிகிரியா மலையின் அடித்தளத்தில் சிங்கத்தின் அமைப்பில் காணப்படும் இம்மலை இலங்கையின் ஓவிய வரலாற்றில் முதன்மை பெறுகின்றன. இங்குள்ள ஓவியங்கள் 5ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. காசியப்பன் மன்னன் காலத்துக்குரியது. இங்கு 21 பெண் உருவங்கள் தனியாகவும், சோடியாகவும் வரையப்பட்டுள்ளன. பெண்கள் மலர்த்தட்டை ஏந்திய வண்ணம் காணப்படுகின்றனர். இப்பெண்களைக் காசியப்பனின் மனைவிகள் என்றும், தேவகன்னியர்கள் என்றும் தேவதைகள் என்றும், கோயிலுக்குச் செல்லும் பெண்கள் என்றும் பலவாறு கூறப்படுகின்றது. இவ் ஓவியங்கள் இந்தியாவில் உள்ள அஜந்தாவின் 11வது குகையில் காணப்படும் ஓவியங்களை ஒத்ததாகக் காணப்படுகின்றன. ஈரச்சுதை (பிரஸ்கோ) முறையில் வரையப்பட்ட ஓவியத்திற்கு வர்ணங்கள் கேசின் சேர்க்கப்பட்டு தீட்டப்பட்டுள்ளது. ஈரச்சுதைக்கு உமி, களிமண், முட்டை, தேன் என்பன பாவிக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் வர்ணங்களாக பொன்மஞ்சள், மஞ்சள், சிவப்பு, பச்சை காணப்படுகின்றன. பெண்களின் கண்கள் நாசிகள் இதழ்கள், உடல் அங்கங்கள், விரல்களின் கனுக்கால் போன்றன மெல்லிய துரிகை திட்டமாக வரையப்பட்டுள்ளது. நிலமட்டத்தில் இருந்து 500 அடி உயரத்தில் இவ் ஓவியங்கள் உள்ளன.

வெள்ளரச மரம்

மகாபோதி விருட்சம் என்று அழைக்கப்படும் புனித வெள்ளரச மரக்கிளையை மகிந்த தேரோவின் தங்கையான சங்கமித்தையினால் அனுராதபுரத்தில் உள்ள மகா மேகநந்தவனப் பகுதியில் நடப்பட்டது. இக்கிளை புத்தபெருமான் ஞான ஒளி பெற்ற மரமான வெள்ளரசு மரத்தின் கிளையாகும். இம்மரத்தைச் சுற்றி 14ம் நூற்றாண்டில் மூன்றாம் இராஜசிங்கன் சுவர் கட்டினான் தற்போது தங்கமுலாம் பூசப்பட்ட வேலி சுற்றிக் காணப்படுகின்றது.

வெள்ளரசு மரம் - அனுராதபுரம்



பொலநறுவைக்காலம்

அனுராதபுர இராச்சியமானது தென் இந்திய சோழர்படை யெடுப்பினால் வீழ்ச்சியடைந்தது. பொலநறுவையில் சோழர் ஆட்சி 993 – 1014 வரை நீடித்தது . 1ம் இராஜ இராஜ சோழ மன்னன் பொலநறுவையைத் தலை நகரமாக்கி ஆட்சி செய்தான். இதனால் அனுராதபுரக்கால சிற்பவளர்ச்சிகள் குறைவடைந்து சோழர் செல்வாக்கான திராவிடக் கலைப்பண்பாடுகளும் சோழ, பாண்டிய சிற்பமுறைகளும் காணப்பட்டன. சோழர் ஆட்சிக்குப் பின்னர் முதலாம் விஜயபாகு 1055 – 1110 வரையும் முதலாம் பராக்கிராமபாகு 1155 – 1186 வரை நிஸ்ஸங்க மல்லன் 1187 – 1186 வரை ஆட்சி புரிந்தான். பொலநறுவையில் காணப்படும் கலை அம்சங்கள் பின்வாறு –

வானவன் மாதேவி ஈஸ்வர முடையான் என்னும் சிவ ஆலயம் தமிழ் மகாசய, லங்கா திலக தாது கோபம், திவங்க ஆலயம் சத்மல்பிரசாதய கல்விகாரை, வட்டதாகெய, வெறட்டகெய, அட்டதாகெய, நிசாங்க லதா மண்டபம், ரன் கொத்த விகாரை, கிரிவெஹரசந்திர வட்டக்கல், குமாரதீர்த்தடாகம் போன்றவையாகும். இவற்றில் கல்விகாரை, வட்டதாகே, நிசங்கலதா மண்டபம் என்பன சிறப்பு வாய்ந்தவையாக உள்ளன. அத்துடன் பராக்கிரமபாகு சிலையும் காணப் படுகின்றது.

சிவ ஆலயம் - பொலநறுவை



இரண்டாம் சிவ ஆலயம் என அழைக்கப்படும் இவ் ஆலயம் சோழ மன்னனான முதலாம் இராஜ இராஜ சோழனால் கட்டுவிக்கப்பட்டது. இந்துமத கோயில் அமைப்பில் முழுவதும் கருங்கற்களால் சோழ சிற்ப முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள தெய்வத்தினை வானவன் மாதேவி ஈசாரமுடையார் எனக் கூறப்படுகின்றது. இவ்வாலயம் இராசேந்திர சோழனாலும் திருத்தியமைக்கப்பட்டது. இங்கு பல உலோகச்சிலைகள் காணப்பட்டன. நடராஜர் சிலை, பார்வதி சிலை, பிள்ளையார், நாயன்மார்கள், விஷ்னு, ஆகிய சிலைகளும் நந்தி, மயில், எலி போன்றவாகனங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கல் விகாரை

பொலநறுவையில் காணப்படும் கல்விகாரை 1ம் பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்டது. இக் கட்டிடங்களுக்குச் செங்கற்கள், கருங்கற்கள் பாவிக்கப் பட்டுள்ளன. இங்கு புத்த பெருமானின் மூன்று நிலைகளான நின்ற நிலை, இருந்த நிலை, படுத்த நிலை வடிவங்கள் காணப்படுகின்றன. மூன்றும் ஒருங்கே அமைந்து காணப்படுவதால் சிறப்புப் பெறுகின்றது.

புத்தரின் நின்ற வடிவம் 'ஆனந்தா'' பொலநறுவை கல்விகாரை

''ஆனந்தா'' வடிவம் என அழைக்கப்படுகின்றது. பரிநிர்வாண நிலையுடைய இவ்வடிவம் தலைப்பக்கத்திலே மார்போடு கைகளை மடித்தப்படி சோகமே உருவமான முறையில் காணப்படுகின்றது. இவ்வடிவம் 23 அடி உயரமாகும். கேசம் சுருள் தன்மையாகவும் அங்க வஸ்திரம் 2,3 வரி வடிவில் அமைந்து விரிந்த தாமரை மலர் மேல் கருங்கல்லை ஊடகமாக வைத்து செதுக்கப்பட்டுள்ளது. அனுக்கிரகம் அளிக்கும் இவ்வடிவம் 12ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

புத்தரின் இருந்த சிலை - கல்விகாரை - பொலநறுவை



இவ்வடிவமானது கண்கள் கூர்மையுடன் பார்ப்பதாகவும் இடது கரத்தின் மேல் வலது கரத்தை வைத்தவாறும் இடது காலுக்கு மேல் வலது கால் வைத்துக் காணப்படுகின்றது தலை சுருள்ளாகவும் காதுகள் மிக நீண்டும் காணப்படுகின்றன. அங்க வரிகள் இரண்டு வரியைக் கொண்டு காணப்படுகின்றது. இவ்வடிவம் கருங்கல்லை ஊடகமாகக் கொண்டு மிகவும் அழகான முறையில் செதுக்கப் பட்டுள்ளது.

புத்தரின் துயில் நிலை கல்விகாரை - பொலநறுவை



துயில் நிலையைக் கொண்ட இவ் வடிவம் 46 அடி நீளமானது. பொலநறுவையுகத்தின் மிகச் சிறந்த வேலைக்கு இது ஒரு சான்றாகும் வலது பாதம் உள்ளங்கை, கால், பாதம் என்பன விறைப்பான தன்மையுடையன. பரி நிர்வாண நிலைக்குரிய அம் மணவடிவம் கொண்டதாகவும் காணப்படுகின்றது. தலையணை அமைப்பு கற்களா பஞ்சு மெத்தையா என வியக்கும் படி அமைக்கப்பட்டுள்ளது. இவ் வடிவத்தின் அங்கவரிகள் இரண்டாக அமையப் பெற்றது.

வட்டதாகே - மிதுருகிரிய - பொலநறுவை



வட்டதாகே விகாரையை 1ம் பராக்கிரமபாகு மன்னன் கட்டுவித்தான். இவ்வாலயம் நான்கு வாசல் கூடங்களை உடையதாகவும் வட்டமாகவும் அமைந்துள்ளது. இதன் நடுப்பகுதியில் சிதைவடைந்த நிலையில் சின்னத் தாது கோபம் உள்ளது. இத்தாது கோபத்தின் முன் பகுதியில் நான்கு புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. வாசல்களின் இரு பக்கங்களிலும் மிகவும் அழகிய வேலைப்பாடுகள் உடைய துவாரகபாலகர் காணப்படுகின்றது. படிகள் ஒவ்வொன்றிலும் பூக்களால் அலங்காரச் சித்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளியே வாசலில் சந்திர வட்டக்கல் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் நிஸசங்கமல்லன் மன்னன் காலத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

ஹெடதாகெய

பொலநறுவையில் காணப்பட்ட வடிவம் இது. நிசங்க மல்லன் என்னும் மன்னன் இதனைக் கட்டுவித்தான். ஹெட்ட என்பது 60 என்பதைக் குறிக்கும். எனவே 60 நாட்களில் கட்டி முடிக்கப்பட்ட விகாரையாகும். முற்றாக அழிந்து விட்டது.

அட்டதாகெய

பொலநறுவையில் காணப்பட்ட வட்டதாகேக்களில் இதுவும் ஒன்றாகும். இதனை விஜயபாகு மன்னன் கட்டுவித்தான் அட்ட என்றால் எட்டை (8)க் குறிக்கும். எனவே இவ்விகாரை எட்டுக் கோபுர கலசங்களைக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். இதுவும் முற்றாக அழிந்து விட்டது.

நிஸங்கலதா மண்டபம் - பொலநறுவை



பொலநறுவைக் காலத்தில் சிறந்த செதுக்கக்கலையின் சிறப்பை எடுத்துக்காட்டும் கலைப்படைப்பு நிஸங்கலதா மண்டபமாகும். இம்மண்டபம் நிஸங்க மல்லன் என்னும் மன்னனால் கட்டுவிக்கப்பட்டது இதன் நீளம் 34 அடி 18 அங்குலம். அகலம் 28 அடி 8 அங்குலம் ஆகும். 7 அடி உயரமான 8 கற்தூண்களும் உள்ளன. இத்தூண்கள் தாமரைக்கொடி போன்ற அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன இவை தற்போது சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றன.

சந்திரவட்டக்கல் (சந்தகடபான) - பொலநறுவை

பொலநறுவைக் காலச்சந்திர வட்டக்கல் அனுராதபுரக்கால சந்திர வட்டக்கல் போன்று சிறந்தனவாக அமையவில்லை. சோழ ஆதிக்கம் இருந்தமையே காரணமாகும். இங்குள்ள சந்திரவட்டக்கல்லில் மிருக வரிசையில் எருது நீக்கப்பட்டு ஏனைய மிருகங்கள் காணப்படுகின்றன. சோழர்கள் எருதுவை தெய்வமாக பேணுவதனால் அதனைக் காலால் மிதிக்கக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு செதுக்கப்பட்டதாகும்.



பராக்கிரமபாகு சிலை பொலநறுவை

பொலநறுவையில் பெத்தல் விகாரைக்கு அண்மையில் காணப்படும் பெரிய கற்பாறையில் சிற்பமாகப் பராக்கிரமபாகு சிலை காணப்படுகின்றது. இச்சிற்ப வடிவத்தினைப் பற்றி வேறு கதைகளும் சொல்லப்படுகின்றன. ஒரு மன்னன் தாடி வளர்த்தும் கையில் ஏடு ஏந்தியும் இருக்க முடியாது என்றும் எனவே இச்சிலையானது ஒரு முனிவரின் தோற்றத்தில் இருப்பதால் அக்கால புலஸ்திய முனிவரின் சிலையாக இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. இச்சிலையானது 12 அடி உயரமானது. மேல் உடம்பில் துணியோ ஆபரணங்களோ காணப்படவில்லை. எனினும் இச்சிலை இன்றுவரை பராக்கிரமபாகு சிலையென கருதப்படுகின்றது.

சேதவனராம விகாரை - பொலநறுவை

இவ்வாலயம் முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் கட்டப்பட்டது. இதனை திவங்க ஆலயம் என அழைக்கப்படுகின்றது. இங்கு திரிபங்க வகையான ஏழு வகைகளில் புத்த பெருமான் கர்பக்கிரகத்தில் காணப்படுகின்றது. முகபாவம் அமைந்த செயற்பாடுகளை விபரிக்கும் கதை, கருணை, பலம், பாவம், வீதி உலாவரும் கதை உண்மைக் காட்சி தரும் சித்திரம், தேவர்களின் உருவங்கள் போன்ற ஜாதகக் கதைகளை விளக்கியுள்ளன இது 12ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

கிரிவிகாரை

பொலநறுவையில் காணப்படும் இவ்விகாரை 1ம் பராக்கிரம பாகுவினால் கட்டப்பட்டது. உருக்குலைந்த நிலையில் இவை காணப்படுகின்றது.

கண்டிய நகர்க்காலம்

இலங்கையின் சிற்பக்கலை வளர்ச்சிக் காலங்களின் மூன்றாவதாக அமைவது கண்டிநகர்க்காலமாகும். இக்காலமானது 13ம் நூற்றாண்டுக்காலம் வரையான பகுதியாகும். இக்காலப்பகுதியில் கண்டி, தம்பதெனியா, யாப்பகுவா, குருணாகல், கம்பளை, சீதாவாக்கே, ராகம போன்ற நகர்களும் அடங்குகின்றன. மத்தியகால சிற்ப சித்திரங்களைக் கொண்ட இக்காலம் விஜயநகர் நாயக்க சேதுபதி சிற்பதன்மைகளைக் கொண்டுள்ளது. இக்காலகட்டத்தில் விகாரைகள் நிர்மாண கலைச் சித்திரங்களை கொண்டு விளங்குகின்றன. பின்வரும் இடங்களில் இவற்றின் செல்வாக்கைக் காணலாம்.

லங்கா திலக விகாரை, கடலாதெனியா விகாரை, தெகல்தொலுவ விகாரை, எம்பக்க தேவாலயம், தலாதா மாளிகை, மெதவல டெம்பிட விகாரை பம்பரகல விகாரை, தனகிரிகல விகாரை, தெல்வத்த புராண விகாரை, தம்புல்ல கிரி விகாரை, களனிய தொடகமுவ விகாரை, குருநாகல் யாப்ப கடவா போன்றனவாகும்.

இங்குள்ள சுவர் ஓவியங்களில் தேசிய கதை, பௌத்த குண இயல்புகள், ஏழு கிழமைகள் போன்றவற்றின் செயல்முறைகள் சிறப்பாக அமையப்பெற்றுள்ளன.

இலங்கா திலக விகாரை கம்பளை



முற்று முழுதாகச் செங்கற்களால் சேனா இலங்காதிகார மன்னனால் இவ்விகாரை கட்டப்பட்டது. இங்குள்ள புத்த வடிவம் 40 அடி உயரத்தில் உலோக வார்ப்பு முறையில் அமைக்கப்பட்டதாகும். இருந்த நிலை புத்த வடிவமான இச்சிலை சமாதி நிலைக்குரிய அங்க அமைப்பைக் கொண்டு பல்லவ சிற்பமுறையில் உள்ளது. திருவாசிமேல் மகர தோரணங்கள் காணப்படுகின்றன. சுவர்களின் வெளிப்புறத்தில் கோட்டங்கள் உடைய அலங்கார சிற்பம் காணப்படுகின்றது. இங்குள்ள சிறந்த கலையம்சம் யானைகள் தாங்குவது போல விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகும். சிங்கள, தமிழ் கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்டது. ஏழு கிழமைகள் என்னும் ஓவியம் இங்கு சிறப்பானது.

கடலா தெனியா விகாரை

இவ்விகாரை 4ம் புவனேகபாகு மன்னனால் கட்டப்பட்டது. முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டது. இவ்வாலயத்தில் பௌத்த, இந்து பூசை முறைகள் காணப்படுகின்றன. இவ்விகாரை சிங்கத்தின் உருவத்தின் மேல் தூண்கள் அமைந்து காணப்படுகின்றது.

புத்த தந்த ஆலயம் - கண்டி தலதாமாளிகை



புத்தரின் புனித பகுதியான பல்லை வைத்து இவ்வாலயம் கட்டப்பட்டது. தலதா மாளிகை என எல்லோராலும் அழைக்கப்படுகின்றது. இவ்வாலயத்தினை விமலதர்ம சூரியன் கட்டுவித்தான். ஆவணி மாதத்தில் பெரகரா ஊர்வலம் நடைபெறும் எண்கோண மண்டபம் இங்கே காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் கூரை தங்க முலாம் பூசப்பட்ட ஓட்டினால் போடப்பட்டுள்ளது.

பெரகராவும் கண்டிய நடனமும்



பௌத்த கலைகளுள் ஒன்றாக அன்று தொடக்கம் இன்று வரை கண்டிய நடனம் சிறந்து விளங்குகின்றது. இவ் நடனம் ஒரு வகை கிராமிய நடனம் போல் காட்சி தருகின்றது. இவ் நடனத்தை மேல் நாட்டவர்களும் விரும்புகின்றார்கள். பௌத்த மக்களின் பாரம்பரியம், பழக்கவழக்கம், கலாச்சாரம், பண்பாடு என்பவற்றை இது சித்தரிக்கின்றது. நடை, உடை, முகபாவனை, என்பன சிறந்தது. பெரகரா காலங்களில் இவர்களது சிறப்பான நடனத்தைக்காண முடியும் பெரகராவில் யானைகளை அலங்கரித்து புனித தாதுவை ஏந்தி வீதிகளில் ஊர்வலமாக வருவது பண்டைய கலாச்சார பாரம் பரியங்களுள் ஒன்றாகும்.

தெகல் தொடுவா சுவர் ஓவியம் - கண்டி

கண்டியில் அமைந்துள்ள தெகல் தொடுவ ஆலயம் 16ம் நூற்றாண்டில் விமலதர்ம சூரியன் மன்னனால் கட்டப்பட்டது. இவ்வாலயத்தின் சுவர்களில் வரைந்துள்ள ஓவியங்கள் கண்டியகால ஓவியங்களில் சிறந்த தெனக் கருதப் படுகின்றது. இங்குள்ள சித்திரங்களை நோக்கும் போது இருபரிமாண முறையில் வரையப்பட்டு இவ் ஓவியங்களுக்கு பின்னணி வர்ணங்களாக சிவப்பு, கரும் சிவப்பு கொடுக்கப்பட்டு உலர் சுதை ஓவியமாகக் கலப்பு வர்ணங்களினால் தீட்டப்பட்டது. கிராமிய வாழ்க்கைமுறை, அன்றைய கலாசார பண்பாடுகள், கலை என்பனவற்றை மையமாகக் கொண்டு காணப்படுகின்றன. இவ்ஓவியங்கள் நான்கு வரிசையில் நான்கு ஜாதகக் கதைகள் வரையப்பட்டுள்ளன.

அவை

(1) வெசந்தர வெள்ளையானை பரிசளித்தல்

(2) சுதுபந்த ஜாதகக் கதை

(3) சீலவ ஜாதகக் கதை

(4) கோம் ஜாதகக் கதை. என்பவையாகும்

அத்துடன் 12 அலங்காரத் தூண்களும் காணப்படுகின்றன. இச் சித்திரங்கள் கதைகளின் தன்மைக்கு முக்கியம் கொடுத்து தொடர் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. ஓவியங்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்குத்

தாமரை, கொடி அலங்காரங்களை வரைந்து அழகுபடுத்தப்பட்டுள்ளது. இவ் ஓவியங்களை பௌத்த பிக்குவான தேவறம்பொட சில்வரத்தின உனான்சே என்பவரால் வரையப்பட்டது. இக்காலத்துக்குரிய புத்தர் சிலைகளின் கண்கள் திறந்த கண்களாக அமைந்துள்ளன. இங்குள்ள சுவர் ஓவியங்களின் படங்கள் கீழ் தரப்பட்டுள்ளன.

1. வெள்ளை யானையைப் பரிசளித்தல்
2. புத்தர் ஞானம் பெற்ற காட்சி
3. மகிந்த தேரர் வருகை
4. விஜயனின் வருகை
5. ஓவியம் – பெண்ணினது வடிவம்

தெகல் தொடுவா ஓவியங்கள்



வெள்ளையானை பரிசளித்தல்

புத்தர் ஞானம் பெற்ற காட்சி



மகிந்த தேரர் வருகை



விஜயன் வருகை

மகிந்ததேரர்



அழகிய மாது

தம்புல்ல குகை ஓவியம் அல்லது கூரைச்சித்திரம் -தம்புல்ல



இலங்கையில் குகை ஓவியத்துக்குச் சிறந்து விளங்கும் இவ் ஆலயம் சமய சம்பந்தமான நிகழ்வுகளை கொண்டு விளங்குகின்றது. நீண்ட குகையை உடைய இவ்வாலயம் 200 அடி நீளமானது. இங்கு 5 குகைகள் உள்ளன. கி. மு. 1ம் நூற்றாண்டில் வத்த காமினி அபயன் என்னும் அரசன் இதனை அமைத்தான். பின்னர் நிசங்கமன்னன், கீர்த்தி இராஜசிங்கன் போன்றோரால் புதுப்பிக்கப்பட்டது. இங்குள்ள ஓவியங்கள் இருபரிமாண முறையில் உலர்சுதை வர்ண ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. இவை தட்டையாக தீட்டப்பட்டவையாகவும் தொடர் சித்திரங்களாகவும் தூரபேதம் அற்ற சித்திரங்களாகவும் காணப்படுகின்றன. 47 அடி நீளமான உறங்கும் புத்தர் சிலையும் 300 வகைப்பட்ட ஏனைய புத்தர் சிலைகளும் காணப்படுகின்றன மிகுது துறவியின் விஜயம், விஜயாவதரணய, மிகுந்தலைப்புதையல், எல்லாளன் துட்டகைமுனுயுத்தம், ஏழு கிழமைகள், இசி பதனை, இறுதித்தானம், புத்தரின் இறப்பு சின்னங்கள் பிரிப்பு என்பன வரையப்பட்டுள்ளன. இவற்றுக்கு இணையாகத் தாமரைமலர், மலர்க்கொடி அலங்காரங்களும் காணப்படுகின்றன புத்தர் சிலைகள் புத்தர் வணக்கம், சக ஜாதகக்கதை, புத்த பிரானின் மறைவு என்பன சிறப்பானதாக விளங்குகின்றன. 1வது குகையில் வாலகம்பாகுவின் உருவச்சிலையும் சைவ மக்களின் தெய்வங்களான விநாயகர், சுப்பிரமணியர், இராமர் இலட்சுமணர், அனுமார் ஆகியன உருவங்களாக வரையப்பட்டுள்ளன.

எம்பக்க தேவாலயம் - கம்பளை

கண்டிய கால மரச்செதுக்கல் வேலைப்பாட்டிற்கு இவ்வாலயம் சிறந்து விளங்குகின்றது. இவ்வாலயம் கம்பளையில் உள்ள அலங்கோளங் கோயில் உள்ள கங்கத பாதையில் அமைந்துள்ளது. மூன்றாம் பராக்கிரமபாகு அரசனால் அமைக்கப்பட்டது. இம் மன்னனின் மகாராணியின் வேண்டுகோளுக்கு அமைய இக்காலத்தில் சிறந்த சிற்பியாக விளங்கிய தெல்மட மூலாச்சரிய என்னும் சிற்பியினால் செதுக்கப்பட்டது. இங்கு கேவிசி என்னும் மண்டபத்தில் 32 தூண்கள் நாற்சதுர வடிவில் அமைக்கப்பட்டு நான்கு ஓரங்களிலும் குந்திரிக்கம், அரும்பு, லிய வெல போன்ற அலங்காரங்கள் அமைக்கப்பட்டு தாழ்புடைப்பு சிற்பங்களாகக் காணப்படுகின்றன. இங்குள்ள சிற்பங்கள் சில பின்வருமாறு –

1. நடன மாது
2. கின்னரப்பெண்
3. மல்யுத்த வீரன்
4. றபானா அடிக்கும் பெண்
5. பிச்சைக்காரன்
6. கம்பு விளையாட்டுத் தேவதை
7. போர் வீரன்
8. இருதலைப்பட்சி
9. அன்னபந்தம்

நடன மாது மரச்செதுக்கு சிற்பம் - எம்பக்க தேவாலயம் கம்பளை

இவ் நடனமானது சிற்பம், கண்டிய மரபு வழி நடனத் தொனிப்பாகக் காணப் படுகின்றது. சிற்பமானது நடன ஆட்டத்தினால் ஏற்படும் நிகழ்வுகள் நடனத்துக்குரிய ஆடை அணிகலன்கள் என்பனவற்றை சிற்பியானவரின் கூர்மைக்கும் கை வண்ணத்திற்கும் நிதானச் செயலுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. ஆடையின் வரிவழகும் தலைமயிரின் வேக போக்கும், நிலையழகும், கை அசைவும் சிறந்தனவாகச் செதுக்கப்பட்டுள்ளன.

கின்னரப் பெண் - எம்பக்க தேவாலயம் கம்பளை



கின்னரப் பெண் மரச் செதுக்கு சிற்பமானது மேற்பகுதி பெண்ணின் உருவமாகவும் அரைப்பகுதிக்குக் கீழ் பறவை உருவமாகவும் காணப்படுகின்றது. காதை மூடி இருக்கும் காதணியும் கழுத்தில் மார்போடு இணைந்த ஆபரணஅழகும் உடலோடு ஒட்டிய உடையழகும் தேவ கன்னிப் பெண்கள் போல் உள்ளன. சதுரவடிவுக்குள் சுற்றிவர லியவெல வடிவங்களுடன் இவ் மரச்சிற்பம் காணப்படுகின்றது.

மல்யுத்த வீரன் எம்பக்க தேவாலயம் - கம்பளை

இச் சிற்பம் இரு வீரர்கள் மல்யுத்தம் புரிவது போல் செதுக்கப் பட்டுள்ளது. ஒரு வீரர் மற்ற வீரரை வளைத்துக் காலால் இடிப்பது போல் செதுக்கியும் அவர்களது உடை அலங்காரம் வடிவாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

ரபானா அடித்தல் - எம்பக்க தேவாலயம் கம்பளை

கண்டிய கால மக்களின் மரபு வழியைக் காட்டுவதற்கு ரபானா அடித்தல் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. ரப்னா அடித்தல் அதனை ரசிக்கும் தன்மை, முகபாவனை, பெண்களின் ஆடை அணிகள் சிறப்பானதாகக் காணப்படுகின்றன. தென் இந்திய நாயக்க முறையைச் சார்ந்தனவாக இவை காணப்படுகின்றன.

எம்பக்க தேவாலயத்தின் சில மரச் சிற்பங்கள்



மரச்சிற்பம்

இருதலைப்பட்சி

நாரிலதா



மரச்சிற்பம்

பிணைந்த அன்னம்

மிகிந்தலை கந்தக சைத்தியம்



மிகிந்தலையில் காணப்படும் கந்தகசைத்தியம் சாஞ்சி, பார்ராசன் கோபங்களில் காணப்படும் குண இயல்புகளை ஒத்தவையாகவே இது அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் கட்டியவர் யார் என அறியமுடியவில்லை. ஆனால் கி.மு. 1560ல் இருந்த வஞ்சக தீசன் சிறு திருத்தங்கள் செய்தான் எனக் கூறப்படுகின்றது. இத்தாது கோபத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் வாகல் கடம் சிறந்த சிற்பவேலைப்பாடுகள் கொண்டனவாகக் காணப்படுகின்றன. முன்பக்கத்தில் மயிலும் மயில் குஞ்சுகள் உடைய வடிவங்களுள் கருங்கல்லால் அமைக்கப்பட்டு காணப்படுகின்றன. விமானம் செங்கல்லால் கட்டி ஆந்திர, பல்லவ, குப்த சிற்ப முறைகளைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. இன்று சிதைவடைந்த நிலையில் உள்ளது.

திரித்துவக் கல்லூரிக் கோயில் - கண்டி

கண்டி திரித்துவ தேவாலயத்தின் சுவர் சித்திரமாக 5 பெரிய அளவு ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ் ஓவியத்தை டேவிற் பெயிண்டர் வரைந்தார் .இங்கு நன்மையுடன் வந்தோரை வாழ்த்தும் குணம், சீடரின் பாதங்களை குரு கழுவுதல், ஆணி அடித்த கள்வன், யேசுநாதர் சிலுவையில், கல்லூரி நிகழ்வுகள் என்பவற்றை கறுப்பு, நீலம், மஞ்சள் போன்ற வர்ணங்கள் பாவிக்கப்பட்டு வரையப்பட்டுள்ளன.

கொழும்பு நகர்க்காலம்

கொழும்பு நகர்க்காலமானது 20ம் நூற்றாண்டுக் காலப்பகுதியைக் கொண்டது. இக்காலப் பகுதியில் காணப்படும் சிற்பங்கள், ஓவியங்கள் கண்டிய தென்னிய சிற்பமுறை, கண்டி நகர் கலைசிற்பமுறை போன்றன கலந்து காணப்படுகின்றன. இக்காலத்துக்குரிய கலையம்ச ஆலயங்கள் முக்கியமான இரண்டாகும் அவை.

1. களனி புத்தவிகாரை
2. பொறளை கோதமிவிகாரை

களனி புத்தவிகாரை - கொழும்பு



இவ் புத்த விகாரை கண்டி, கொழும்பு நகர் காலச்சிற்ப முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு புதிய பழைய கட்டிடங்களில் புதிய பழைய ஓவியங்கள் காணப்படுகின்றன. புதுக்களனி விகாரையில் சோளியஸ் மெண்டிஸ் என்ற ஓவியர் காய்ந்த சுதை ஓவிய மரபில் பழைய கண்டிய கால சுதை ஓவிய மரபில் நின்று விலகி புதிய பாணியில் அலங்கார வடிவில் சித்திரங்கள் வரைந்துள்ளார். ஞதனயுக சுவர் ஓலியம் மகிந்தனின் இலங்கை விஜயம் போன்றன சிறப்பானதாகவுள்ளன. இவ்விகாரை ரஜமகா விகாரை என அழைக்கப்படுகின்றது.

பொறள்ள கோதமி விகாரை - கொழும்பு

இவ்விகாரையில் ஓவியரான ஜோஜ் கீத் என்பவரினால் புதிய முறையில் நவீன ஓவியங்களாக ஜாதகக் கதைகள் வரையப்பட்டுள்ளன. மாயாதேவியின் கனவு, யமனுடன் யுத்தம், புத்தரின் வாழ்க்கை வரலாறு, மனைவியையும் மகனையும் விட்டுச் செல்லும் காட்சி, ஞானம் பெற்ற காட்சி, புத்தரை சோதிக்கும் காட்சி என்பன பிரகாசமான நிறங்களால் தீட்டப்பட்டுள்ளன.

மாயாதேவியின் கனவுச்சித்திரம்



யாப்பகடவா - குருநாகல்

குருநாகல் மாவட்டத்தில் இவ்விகாரை அமைந்துள்ளது. சுப்பர் குன்று அல்லது சுந்தரகிரி பர்வதம் என அழைக்கப்படுகின்றது. இவ்விகாரை 300 அடி உயரமுடையது. இங்கு கருங்கல்லினால் சாளரம் அமைத்து காணப்படுகின்றது.

இலங்கையின் சித்திரக்கலைஞர்களும் அவர்களது ஆக்கங்களும்

1. தேவறம்பொட சில்வரெத்தின உனான்சே.

இவர் பௌத்தபிக்கு கண்டிய கால ஓவியர். தெகல் தொறுவாயில் உள்ள ஜாதகக் கதைகளை வரைந்தவர் ஆவார்.

2. முதலியார் **A.C.** அமரசேகர

1883ல் பிறந்தவர் தனது 19வது வயதில் ஓவியம் வரையத் தொடங்கியவர். கேலிச்சித்திரம் வரைவதில் புகழ் பெற்றவர் இவர் எக்கசியர் என்ற சித்திர கூடத்தை அமைத்தார். இவர் வரைந்த பேய் நடனம் மிகவும் சிறப்பானது.

3. சோலியஸ் மெண்டிஸ்

1905ல் பிறந்தவர் இவர். அசோக இராம, தூபராமிய கண்டி திரினிற்ரி விகாரை, களனி விகாரை போன்றவற்றில் ஓவியங்கள் வரைந்துள்ளார். இவர் சிலை செய்வதிலும் முதன்மையானவர் களனி விகாரையில் கண்டிய பாணியைத் தழுவி புதிய பாணியில் சீவலித்த, தமிகா, இமிலி தேச தேவதை என்ற ஓவியங்கள் சிறந்தன.

4. ஜோஜ் கீற்

1901ல் பிறந்தவர். இவரது சிறந்த படைப்புகளாகப் பொறளை கோதமி விகாரையில் புத்தர் ஞானம் பெற்ற காட்சி, புத்தரின் துறவு நிலை, மாயா தேவியின் கனவு என்பவற்றை சாதாரண கோடுகள் வரைவதன் மூலமும் வர்ணம்பூசுதல் மூலமும் உயிர் ஓட்டமுடைய ஓவியங்களை வரைந்தவர்.

5. டேவிற் பெயின்ரர்

இவரது ஓவியங்கள் கண்டி திருத்தவத் தேவாலயத்தின் சுவர்களில் காணப்படுகின்றன. ஆணி அடித்த கள்வன், யேசுநாதர் சிலுவையில் அறைதல், வந்தோரை வாழ்த்தும் குணம் என்பன சிறந்த படைப்பாகும்.

6. **J. D. A.** பெரேரா

இவர் இளவயதில் சித்திரப்புலமை பெற்றவர் . வின்டன் லயன், பின்டற் என்பவருடன் சேர்ந்து சிலோன் ஆட் சென்றர். (கலைக்கல்லூரி) என்ற கலைக் கூடத்தை அமைத்தவர். அதன் தலைவராகவும் இருந்தவர்.

பத்ம அலங்காரம்

அல்லது

தாமரை மலர் அலங்காரம்





லியவெல அலங்காரம் (கொடியலங்காரங்கள்)



அன்னம்

ஜீவன விருட்ஷம்
(உயிர் மரம்)





நவநாரி குஞ்சரய வடிவம்
(யானை வடிவில் 9 பெண்கள்)

வெஸ்ஸந்தர ஜாதக 18ஆம் கதையில் வரும் காட்சி

லியவெல அலங்காரம்

கொடி அலங்காரம் (லியவெல)



அன்னாசி மலர்

தாமரை மலர் அலங்காரம்
லங்கா திலக விகாரை

அன்னக் கூட்டம் – லங்கா திலக விகாரையில் அமைக்கப்பட்டுள்ளது

மகர தோரணம்
(பௌத்த கலாச்சாரம்)



அன்னக் கூட்டம் கொண்ட அலங்காரம்

7. S. D. P. மஞ்சு சிறி

ரவீந்திரனாத் சாந்த நிகேதனத்தில் துறவியாக இருந்து சித்திரம் வரைந்தவர். பிரதி எடுத்து படம் வரைவதில் வல்லவர். தற்போது இவரது மகன் குசான் மஞ்சுசிறி ஓவியராகச் செயல் படுகின்றார்.

8. ஸ்டான்லி அபயசிங்க.

உலகின் பல பாகங்களுக்கும் பயணம் செய்து கலைகளைத் தொகுத்தவர். கலா பீட விரிவுரையாளராகக் கடமை புரிந்தவர். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் 39X11 அடி அளவான கண்டி பெரகரா காட்சி இவரது படைப்பாகும்.

9. லயனல் வெண்டர்

இவர் சிறந்த புகைப்படப்பிடிப்பாளர். இவர் உருவாக்கிய கலைப்பீடமே லயனல் வென்ட் ஆகும். பல ஓவியக் கலைஞர்களை உருவாக்கியவர்

10. கலாயோகி ஆனந்த குமாரசாமி

1877ல் பிறந்தவர் பல நாடுகளுக்கு விஜயம் செய்து கலை விடயமான பல நூல்களை வெளியிட்டுள்ளார். நாட்டின் சிற்பக் கட்டிடக்கலைகள் பற்றி ஆராய்ந்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

11. காமினி ரெத்தினவீர

இவர் இலங்கையில் வெளியிடும் முத்திரைகளுக்கு சித்திரம் வரைபவர்.

சேனகா சேனநாயக்கா

இளம்வயதிலே அதிஉன்னதமான படைப்புக்களைப் படைத்தவர். இவர் 18 நாடுகளில் 95 தனி நபர் கண்காட்சிகளை நடத்தியவர். ஐ. நா தலைமையகம், வெள்ளை மாளிகை, FAO தலைமைக் கட்டிடம் ரோம் சர்வதேச பாலகம் பேரன்நேஷனல் பனசொனிக் தலைமையகம் ஒசாக்கா பேர்லின் மியூசியம், டல்லாஸ், நேஷனல் ஜோக்ரபிக், இலங்கைப் பாராளுமன்றம் போன்ற இடங்களில் இவரது ஓவியங்கள் சிறப்புற்று விளங்குகின்றன. இவற்றைவிட ஹிர்பீரிஸ், வின்சர், ஜவன் பீரிஸ், S.R. கனகசபை, இராசையா, மணியம், ரமணி, மார்க், சானா, வி. கே. சிவப்பிரகாசம் போன்ற ஓவியர்களும் சிறப்பான படைப்புக்களைப் படைத்துள்ளனர்.

மேலைத்தேய கலாசார வரலாறுகள்

மேலைத்தேய கலாசாரங்களின் தோற்றங்கள் நாகரீக வளர்ச்சியின் தோற்றங்களேயாகும். இவ் நாகரீக வளர்ச்சிகள் ஐரோப்பா, கீழைத்தேசங்களில் சிற்ப, ஓவிய கட்டிட அமைப்பு, போன்றவற்றில் காணப்படுகின்றன. இவை சுவர் ஓவியங்களாகவும், குகை ஓவியங்களாகவும் தங்கள் தங்கள் நாட்டுக்குரிய கலையம் சங்கங்களுடன் காணப்படுகின்றன. அவை –

1. இந்தியக்கலாசாரம்
2. கிரேக்க கலாசாரம்
3. எகிப்திய கலாசாரம்
4. உரோமானிய கலாசாரம்

இந்திய கலை கலாசார வரலாறு

இந்து நதிக்கரை நாகரீகத்துடன் தொடர்புடைய நகரான மொகன் ஜதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களோடு தொடர்புடையன கி. மு. 2500 ஆண்டுக்கு முற்பட்டதாகக் கருதப்படுகின்றது. நாகரீககால சின்னங்களும் கட்டிட சிற்ப ஓவியங்களுக்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. அத்துடன் அஜந்தா ஓவியம், சாஞ்சி, பாக், கித்தன்ன, எல்லோரா, காஞ்சி, தாஜ்மகால், மதுரை என்பன சிறப்பானவையாக உள்ளன.

மொகன்ஜதாரே, ஹரப்பா

இங்கு கி. மு. 2500 முற்பட்ட நாகரீக அடையாளங்கள் பண்பாடுகள் காண்பப் படுகின்றன. இங்கு 9 கடைகளின் கோபுரங்கள், வீடுகள், மாடி அறைகள் உடைய சதுரமுற்றம் கொண்ட பல அமைப்புகள், அறைகள், குளிக்கும் அறை, கிணறு, தாடகம், என்பன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சிவப்பு மண்ணினால் அலங்கரிக்கப்பட்ட சுண்ணக்கல்லிலான ஆணின் மேல்பகுதி, உலோகத்திலான நடனமாது, மண்ணலான காளை, குரங்கு, குதிரைக் கொம்புடன் கூடிய கடவுள், நீண்ட கொம்புடைய பசு, எருமை, என்பன சிறப்பானவையாகக் காணப் படுகின்றன. நகரத்தின் சூழல், பாதுகாப்பு, சுகாதாரம், என்பன இவ் நாகரீகத்தில் காணக் கூடியதாகவுள்ளன. இந்து நாகரீகத்தில் காணப்பட்ட கலைப்படைப்புக்கள் மிகக் குறைவாயினும் அவற்றின் மூலம் அம்மக்களிடையே காணப்பட்ட கலைத் திறமைகளையும் சமய நம்பிக்கைகளையும் அறியக்கூடியதாகவுள்ளது.

கொம்புடையமாடு

யோகக்கலை



சுவர் ஓவியம்



நடனப் பெண் (வெண்கலம்)

சுவர் ஓவியம்

அஜந்தா குகை ஓவியம்

இந்தியாவின் ஹைதராபாத் பகுதியில் அரைப்பங்கு கோள வடிவத்தைக் கொண்ட குன்றொன்றின் உட்பகுதி தோண்டப்பட்டு இக்குகை அமைந்துள்ளது. ஆங்கிலேய இராணுவ அதிகாரியான ஜேம்ஸ் அலெக்ஸ்ஸாந்தர் என்பவர் எதிர்பாராத விதமாக இக்குகையைக் கண்டுபிடித்தார். இங்கு 29 குகைகள் உள்ளன. இதில் 1, 2, 9, 10, 16, 17 ஆகிய குகைகளில் மட்டுமே ஓவியங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள ஓவியங்கள் ஒரே காலப்பகுதியில் வரைந்தவையல்ல.

2ம் 11ம் குகைகளில் காசி அரசன் அனுப்பிய வேடனிடம் ஆறு தந்தங்களுடைய யானை தன்னுடைய தந்தங்களை வழங்குவதைச் சித்திரிக்கும் காட்சியும் 17ம் குகையில் சிம்மல அவதானமும் 16வது குகையில் ஹரிசேனன் சித்தாந்த கண்ட ஒளி ஓவியமும் 9, 10, 16, 19 இலக்க முடைய குன்று சையித்தியங்களாகவும் 14, 15, 16, 17, 18, 19, 20 சிற்பங்களும் நுண்ணிய வேலைப்பாடுகளும் 10ம் 17ம் குகைகளில் புத்தரது பிறப்பு ஞானம் பெற்றமை, புத்தர் பரிநிர்வாணம் அடைந்த ஓவியம், அப்சரங் உருவம் போன்றனவும் 17வது குகை ஓவியம் இலங்கையில் உள்ள சிகிரியா ஓவியத்தை ஒத்தமாரி உள்ளன. இங்குள்ள ஓவியங்கள் யாவும் ஈரச்சுதை ஓவியங்களாகவும் உலர்சுதை ஓவியங்களாகவும் வரையப்பட்டுள்ளன. அரசளங்குமாரிகள், அந்தப்புரப் பெண்கள், இவர்களைச் சுமக்கும் வண்டி, வேலைக்காரன், விவசாயிகள், பாடுபவர், பிச்சைக்காரன், மிருகங்கள், பறவைகள் ,மலர்கள் மொட்டுக்கள் என்பனவும் 10வது குகையில் பழமை வாய்ந்த 39 தூண்கள் காணப்படுகின்றன. இவை சைத்திய அமைப்புகள் குப்த, பாறுத், அமராவதி, சாஞ்சி மரபை தழுவிக் காணப்படுகின்றது. அஜந்தா ஓவியங்களின் அமைப்பு இலங்கை சீனா, யப்பான், நேபாளம், திபெத் போன்ற நாடுகளுக்கும் பரவியுள்ளன.

பாக்குகை

இந்தியாவின் வட மலையின் தென்சரிவில் இவை 1500 ஆண்டுக்கு முன் வெட்டி அமைக்கப்பட்டதாகும். இக்குகை பௌத்த துறவிகளின் இல்லமாகவும் வழிபாட்டு ஆலயமாகவும் சமயநிகழ்வு நடைபெறும் இடமாகவும் பயன் படுத்தப்பட்டன. தற்போது இவை பெருமளவு அழிந்த நிலையில் காணப்படுகின்றன. தற்போது நான்கு குகைகள் அழியாமல் உள்ளன. அஜந்தா ஓவியத்தின் சாயலைக் கொண்டனவாக இவை காணப்பட்டன. பொதுவாக இங்குள்ள ஓவியங்கள் சமூக வாழ்க்கையையும் வீண் ஆடம்பர வாழ்வையும், இன்ப, துன்ப, நினைவுகளைப் புலப்படுத்தும் ஓவியமாகக் காணப்பட்டன.

சாஞ்சி

இந்தியாவின் கோபால் நகரத்தில் அமைந்துள்ளது. அசோக மன்னனால் கட்டப்பட்டது. இத்தாது கோபம் அடிவிட்டம் 120 அடியானது. 10 அடி வட்டமான 9அடி உயரமான தூண் வேளகள் காணப்படுகின்றன. இங்கு குப்த, மௌரிய காலத்துக்கு உரியவையாக காணப்படுகின்றன. சாஞ்சி தோரணம் விசாலமான நான்கு பக்க அமைப்பைக் கொண்ட கற்றூண்கள் இரண்டை நிறுத்தி அதன் மேல் மூன்று கற்படிவங்களைக் குறுக்கே வைத்து அலங்காரமான செதுக்கல் வேலைப்பாடுகளுடன் பௌத்த கலையைப்பற்றி செதுக்கப்பட்டுள்ளது. உருவத்திற்கு உருவம் மறைந்த நிலையில் சிற்பக்கலை அமைந்துள்ளது. சாஞ்சிதூபியில் புத்தரின் சரிதம், சாதகக்கதைகள், வரலாற்றுச்

சம்பவங்கள், அரசமரம், வஜிராசனத்தூபி, அசோகன் புத்தகாயாவிற்குச் சென்று சிறிமகாபோதியை வணங்குதல் போன்றன சிறப்பானதாகச் செதுக்கப்பட்டுள்ளன புத்தரின் வடிவமான சாராணாத் வடிவம் சிறப்பானதாகவுள்ளது.





பாருக் - இந்தியா

கி.மு. 150க்கு முற்பட்ட காலத்துக்குரியன. இங்கு தூண்கள் அமைக்கப்பட்டு தூண்களின் இடைவெளிகளில் மூன்று வட்ட சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட சிற்பங்களை இங்கே காணமுடியும் இங்கு மனித வடிவம், யானை வடிவம் என்பன வழிபாட்டு தெய்வமாக காட்டப்பட்டுள்ளன. இவ் வேலைப்பாடுகளைச் செய்தவர்கள் யானைக் கொம்பு வேலைகளில் பயிற்சி பெற்றவர்களாக இருந்து இருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது.

புத்தகாயா

புத்தர் ஞானம் அடைந்த புத்தகாயா இந்தியாவின் வட பகுதியில் புத்தகாயா என்னும் இடத்தில் உள்ளது. உயர்ந்த மேடையில் செங்கற்களால் கட்டப்பட்ட ஒரு கூம்பு அமைக்கப்பட்டு ஒரு சிறிய தூபியில் இருந்து சிகரம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்திற்கு இலங்கை அரசாங்கம் தங்க முலாம் பூசும் திட்டத்தை மேற்கொண்டு நிறைவு செய்தது.

வேதசைகிரி

இவ்கோயில் நாகவம்சத்தினதும் மௌரிய தோன்றிய சங்கவம்சமான ஒரு பிரிவினால் அமைக்கப்பட்டது. இதனை உதயகிரி என அழைப்பர். முனிவர், தேவர், அசுரர், நம்பிக்கையான தெய்வ மிருகம் ஆகியவற்றின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள ஆறாவது குகை சந்திர புத்த குகையெனக் கூறப்படுகின்றது.

தாஜ்மகால்

சாஜகான் இதனை கட்டிவித்தான். இவ் மகால் 15வருடங்களாக கட்டப்பட்டன. இதனைக் கட்டிய சிற்பிகள் சாராண், வெணியர் ஆவர் வெண்பளிங்கு கல்லால் கட்டப்பட்டது. இக்கட்டிடம் மொகலாயர் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

தென் இந்தியாவில் பிரசித்தி பெற்ற ஆலயங்கள்

1. சிதம்பரம்

தென் இந்தியாவின் தில்லை நகரில் அமைந்துள்ளது. சோழ மன்னர்களால் அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தைப் பூலோக கைலாயம் என அழைப்பர். இங்கு நடராசர் சிலை, சிவகாம சுந்தரி போன்ற உருவச்சிலைகள் தங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

2. இராமேஸ்வரம்

இந்தியாவின் தென் கடலோரமாக அமைந்துள்ளது. கலைவனப்பும் சிற்ப வேலைப்பாடுகளும் கொண்டு காணப்படுகின்றன. இங்குள்ள லிங்கம் இராமபிரானால் தாபிக்கப்பட்டது. இவ்வாலயத்தின் இராஜ கோபுரம் சிறப்பு மிக்கதாகும். சிறந்த சிற்ப வேலைகளுடன் இவை அமைக்கப்பட்டுள்ளன.

3. மதுரை மீனாட்சி அம்மன்

இந்தியாவின் மதுரை நகரில் காணப்படுகின்றது. நாயக்கர் காலத்துக்குரிய இவ்வாலயம் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் காணக்கூடியதாக உள்ளது. சிறந்த வேலைப்பாடுகளுடைய ராஜய கோபுரங்கள் நான்கு பக்கங்களிலும் காணப்படுகின்றன. அம்மன் ஆபரணங்கள், இரத்தினங்கள் தங்கம் என்பவற்றால் அமைக்கப்பட்டன. அம்மனின் மூக்குத்தி இரத்தினக்கல்லால் ஆனது. இவ்வாலயத்தில் அழகான ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன.

சோழர் ஓவியம்

எல்லோரா

இந்தியாவில் மலைப்பாறையில் குடையப்பட்டவை. இவ்வாறு . 34 குடைக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இவ் மலைக்குகையில் இந்து மதம், புத்த மதம், சமண மதம், ஆகியவற்றுக்குத் தனித்தனியாகக் குகையில் சிற்பங்கள் ஓவியங்கள் காணப்படுகின்றன. புத்தமதத்திற்கு 12 குடைக்கோயிலும் இந்து மதத்திற்கு 17 குடைக்கோயிலும் சமண மதத்திற்கு 5 குடைக் கோயிலும் காணப்படுகின்றன. இவ் வகையானவை 4ம் நூற்றாண்டில் இருந்து 10ம் நூற்றாண்டு வரை அமைக்கப்பட்டவையாகும். புத்த மதத்துக்கு 48அடி சதுரகுகையில் புத்தவடிவம், புத்தர் போதிமர சிம்மாசனம் துறவி உருவம் போன்ற வடிவங்கள் உள்ளன. புத்தர் கால்கள் தொங்க விடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இந்து மதத்திற்கு 54 அடி நீளமும் 55 அடி அகலமும் கொண்டது. இங்கு 14 சைவ சமய சிற்பங்கள் காணப்படுகின்றன. 11வது குகையில் 13 மாடிகள் காணப்படுகின்றன. இங்கு இந்திர சபை மகுடாசூரம்த்தினி சிவன், பார்வதி, நடராசர் இராவணனின் தோள்களால் கைலாயமலை தூக்கும் காட்சி, பைரவர், கணபதி, திருமால், இலக்குமி, துர்க்கை, கூர்ம அவதாரம், நாகராசன், பூதேவி, போன்ற சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சமண மதத்தின் சிலையாக பார்சுவ நாதர் மேல் 7 தலை பாம்பு நிர்வாணபெண்கள் குடை பிடித்தல், மகாவீரர் தீர்த்தங்கள் போன்றன காணப்படுகின்றன. இங்குள்ள ஓவியம் ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு முறை கீறியது. பெரும்பாலனவை ஓவியங்கள் நீண்டு சிறியனவாகவும் திறந்தகண் நீண்டமூக்கு அமைப்பில் காணப்படுகின்றன.

சாரநாத்

இந்தியாவின் பனாரிஸ் மாநிலத்தில் கங்கை யமுனநதிக் கருகாமையில் சாரநாத் புத்தர்சிலை அமைக்கப்பட்டுள்ளது. அமராவதியை ஒத்த சிலையாகக் கணிக்கப்படுகின்றது. இச்சிலை 7 அடி தொடக்கம் 9அடிவரை உயரமுள்ளது. இச்சிலையின் உடல் அங்கங்கள் மென்மையான தன்மையைக் காட்டுகின்றன. புத்தரின் ஒப்பற்ற தன்மை கருணை, கண்கள் தியானத்தையும் யோக நிலைக்குரிய வஜ்ர ஆசனத்தில் கைகள் தர்மத்தை போதிப்பனவாக அமைந்துள்ளன. கீழ் பீடத்தில் 3 சோடி பணிபுரியும் மக்கள் காணப்படுகின்றன. தர்ம சக்கரம் ஏற்றிய நிலையில் உள்ளது. இச்சிலை "அணர்" என்னும் கல்வகையினால் செதுக்கப்பட்டுள்ளது.



சாரநாத்

சாரநாத் புத்தர்சிலை

உலகப் புகழ் பெற்ற ஓவியர்கள்

1. லியனாடோடாவின்சி

1452 – 1519 இவர் இத்தாலியின் புளொரன்ஸ் நகரில் வின்சி என்னும் கிராமத்தில் 1452 ஏப்பிரல் 15ம் திகதி பிறந்தார். மறுமலர்ச்சிக் கால ஓவியரான இவர் 15 வயதில் கலைக்கு வழி கோலியவர். கணிதம் ,சித்திரம், சங்கீதம் என்பவற்றில் புகழ் பெற்றவர். இவர் வெரக்கியோ என்னும் ஓவியரிடம் பயின்றவர். இவரது சிறந்த ஓவியங்கள் சில

1. ஞானஸ் நானம் என்னும் சித்திரத்தின் இடது பக்க ஓரத்தில் அமரர் ஒருவரின்உருவம் (குருவின் பாராட்டை பெற்றது)
2 மிலானின் புனித மேரி டெலாகிரஸி டொமினிக்கன் ஆச்சிரமத்தின் சிற்றுண்டிச்சாலை சுவரில் '' இறுதி இராப்போசனம் '' 12 சீடர்களுடன் யேசு நாதர் விருந்துண்னும் காட்சி
3. ''மொனாலிசா புகழ் பெற்றது'' இச்சித்திரம் புளோரன்ஸ் நகரில் வாழ்ந்த பிரான்ஸிகோ ஜியோ கொண்டாவின் 3வது மனைவியின் முகமாகும்.
4. மியுனிக் நூதனசாலையில் உள்ள மரியாவும் பூவும், குன்றின் மேல் இருக்கும் வேதமாதா என்பனவாகும்.

2. மைக்கல் அஞ்சலோ

கி. பி. 1475 – 1564 காலப்பகுதியின் இத்தாலிய எழுச்சிக்காலத்தில் வாழ்ந்தவர். இவர் சித்திரம் வரைவதிலும் சிற்பம் செய்வதிலும் புகழ் பெற்றவர். இவர் வரைந்த ஓவியங்கள், சிலைகள் பின்வருமாறு –

1. 1496ல் பியற்சிஸ் என்ற பெயரில் மரியாளின் படம்
2. 1508ல் வத்திக்கானில் உள்ள சிஸ்டர் தேவாலயத்தில் 350 அடி நீளமுள்ள கூரையின் உட் புறத்தில் 9 பகுதியாகப் பிரித்து சித்திரம் வரைந்தவர். மனித உருவம் அடங்கிய 349 உருவமும் 1502 ஆண்டு தொடக்கம் 1512 வரை வரைந்தவர்.
3. சிஸ்டர் தேவாலயத்தில் மோசஸ் சிலையை வரைந்தவர்
4. சிஸ்டர் தேவாலயத்தில் ''கடைசித்தீர்ப்பு'' ஓவியம் இவரது கடைசிப் படைப்பு
5. ரொன்டாண் பியெட்டா 6. மோசஸ் சிலை
7. தேவமாதா சுதனைமடியில் வைத்து துயரும் காட்சி

ரபாயல் - 1420 - 1483

இவரும் இத்தாலியின் எழுச்சிக்காலத்தில் வாழ்ந்த கலைமேதை. இவரின் 2000 படைப்புக்களுக்கு மேல் உள்ளது. இவர் வரைந்த ஓவியங்கள் –

1. மரியாள் யேசு குழந்தை
2. ரோமில் வரையப்பட்ட மடோனா மரியாள் குழந்தையை ஏந்திக் காணப்படும் சித்திரம்
3. பிரஸ்கோ முறையில் வத்திகானில் உள்ள டெலாசிஜ்னசுரா அறையில் எதன்ஸ் குருகுலம் என்னும் சித்திரம்.
4. ஜூலியஸ் உருவச்சிலை
5. சிஸனடன் மெடோனா

பிக்கா சோ - 1881 - 1973

ஸ்பானிய நாட்டில் பிறந்தவர். உலகப்புகழ் பெற்ற கிறுக்கல் சித்திர ஓவியர். இவர் நவீன வடிவங்களாக வரைந்தவர். இவர் ஏழைகளின் வாழ்வை துல்லியமான ஓவியங்களாக வரைந்தவர். இவரது படைப்புக்களாவன.

1. குவர்னிக்கா
2. வயலினும் திராட்சைப் பழங்களும்
3. அவிக் நாவின் நங்கையர்

போல் செசான் - 1839 - 1906

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். நவீன ஓவியக்கலைக்கு அடித்தளமாய் அமைந்தவர். கேத்திர கணித அமைப்புக்களின் தன்மையைக் கொண்ட சித்திரங்களை வரைந்தவர்.

இவர்களை விட கோயா, வான் கொக், புறுக்கெல், சீசான், றூவென்ஸ் ரேணர், டியூறெர், மற்ரிஸ், ஜோஜ் பரோக், மாசல் டூசம் போன்றவர்கள் உலகப் புகழ் பெற்ற ஓவியர்களாகத் திகழ்ந்தனர்.

லியனாடோ டாவின்சியின் கலைப்படைப்புக்கள்





மைக்கல் அஞ்சலோவின் கலைப்படைப்புக்கள்











பிக்காசோவின் கலைப்படைப்புக்கள்





கிரேக்க கலாசாரம்

கிரேக்க கலாச்சாரமானது கி. மு. 1300 இருந்தே ஆரம்பமானது. எனவே நீண்ட வரலாற்றுத் தன்மையைக் கொண்டது. கிரேக்கருடைய கலைப் படைப்பிற்கும் எகிப்திய கலைப் படைப்பிற்கும் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. கிரேக்கர்கள் சொந்த படைப்புக்களை வெளியிடுவதில் சுதந்திரம் உடையவர்களாக காணப்பட்டனர். இவர்கள் ஆடை அலங்காரம், மட்பாண்ட வேலை, உலோக நாணயம் என்பன சிறந்தனவாக உள்ளன. மேலும் கிரேக்கர்கள் சிலைகள் செய்வதிலும் முதன்மையானவர்கள். இவர்களது சிலைகள் விளையாட்டு வீரர்கள், எழுத்தாளர்கள் போன்றவர்களது ஆக்கங்களே கூடுதலானவை ஆகும். மனித உடற் கூற்றுக்கு முதன்மை கொடுத்து சிலைகளை உருவாக்கினார்கள். இச் சிலைகளை மாபிள், களிமண், சுண்ணாம்புக்கல், உலோகங்கள் போன்றவற்றில் வடித்தனர். அவற்றில் சிலவற்றை பார்ப்போம்.

1. கி. பி. 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த மைரன் என்ற சிற்பியால் உலோகத்தினால் செய்யப்பட்ட "பரிதி வட்டம் வீசல்" சிலை.
2. பிரன்சிடேலஸ் என்பவரால் செதுக்கப்பட்ட ஹேர்மிஸ்" சிலை.
3. கிரேக்க திரட்சியுடைய மனிதன்.
4. பொலிக்டஸ் என்ற சிற்பியால் அமைக்கப்பட்ட "ஈட்டி எறியும் வீரன்" சிலை.
5. டொறிக் முறையில் அமைக்கப்பட்ட கட்டிட கலைக்கு சிறப்புப் பெற்ற "பார்த்தினன்" தேவாலயம்.
6. யேசு பிரானை உயிர் நீத்த நிலையில் ஏந்தி நிற்கும் "பியெட்டா" சிலை.
7. கிரி கருண்டாவினால் அமைக்கப்பட்ட "டயோனியஸ் சிலை".
8. பிடியஸ் சிற்பியால் அமைத்த "ஆதினா தெய்வம்".
9. டாவின்சியின் "மோசஸ் சிலை".
10. கருங்கள் தூண்கள். ஏனையவை
11. ஏனைய சில சிற்பங்கள்







கிரேக்க ஓவியக்கலை

கிரேக்க ஓவியக்கலை சிற்பக்கலைகள் போன்று சிறப்படையவில்லை. இங்கு ஹோமர் என்ற மகாகவி மரண மடைந்த காலத்தில் இருந்து ஆரம்பமானது. ஏறக்குறைய கி. மு. 750 ஆண்டில் இருந்து ஏறக்குறைய 300 வருடங்களுக்கு கிரேக்க ஓவியக்கலை எகிப்திய ஓவியக்கலையைச் சாந்தனவாக இருந்தன. பின்னர் தமக்குரிய பாணியில் ஓவியங்களை வரையத் தொடங்கினர். இவர்கள் வரைந்த ஓவியங்கள் நாடகக் காட்சிகள், ஐதீக புராணங்களில் உள்ள வீரர்களின் கதைகள் என்பனவாகும். அத்துடன் சாடிகளில் கோடுகளால் பிரிக்கப்பட்டு ஓவியங்கள் கதை கூறும் பாணியில் வரையப்பட்டுள்ளன.

ஓவியங்களுடன் கூடிய பூச்சாடிகள். (கிரேக்கம்)

எகிப்திய கலாசாரம்

நைல் நதியின் கொடையென வர்ணிக்கப்படும் எகிப்தில் நாகரீகம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. எகிப்தின் வரலாறு மூன்று யுகங்களைக் கொண்டது. அவை புராதன அரசயுகம், இடைக்கால அரசயுகம், அந்நியராட்சியுகம் என்பனவாகும். எகிப்தியர் கட்டிடங்களைக் கட்டுவதிலும் சிறந்து விளங்கினர். எகிப்தில் பின்வருவன

சிறப்பானவையாகக் காணப்படுகின்றன. பிரமிட், சியோப்பஸ், கானெக், பினோமி, ரியோபஸ், கப்பல் ஓட்டிய சிலை, நேபேட்டி ராணி அபுசிம்பல் போன்றன சிறப்பானவை.

பிரமிட்

மூன்றாம் குல மரபைச் சார்ந்த அர்சன் சோசர் காலத்தில் அரசசபைக்கு வேந்தராகவும் கட்டிடக் கலைஞராகவும் விளங்கிய "இம் கோடேப்பு" கலை வளச்சிக்கு உதவியவர். 4ம் மரபினர் காலத்தில் கீசாவில் மூன்று பிரமிட் கட்டப்பட்டது. குபுவின் பிரமிட் மிகப் பெரியன. பிரமிட்டுக்கள் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன. பிரமிட்டு 146.50 மீ நீளம் ஒவ்வொரு பக்கமும் 230.38 மீ உயரமும் கொண்டு ஏறக்குறைய 54000 சதுர பரப்பளவைக் கொண்டது. பிரமிட்டுக்கு அருகில் சடங்குகள் செய்யும் கட்டிடம், பிணமனக்கோயில், பிரபுகளின் கல்லறைகளும் கட்டப்பட்டுள்ளன.

இசுபிங்சு - (ஸ்பிஸஸ்)

இவ் உருவம் கீசாவில் உள்ள காப்ரீ கோயிலுக்கு கீழ் காணப்படுகின்றது. இவ் உருவம் சாய்ந்து படுத்திருக்கும் ஒரு சிங்கத்தின் அமைப்பைக் கொண்டது. 57 மீற்றர் நீளம் 20 மீற்றர் அகலம் கொண்டது. இதன் தலை எகிப்திய அரசர் காப்ரீ போன்று செதுக்கப்பட்டுள்ளது. தலையில் எகிப்திய மன்னர் அணியும் நீமிசும் காணப்படுகின்றது.











1. அபுசிம்பல் சிற்பம்
2. எகிப்திய ஓவியம் இசைக்குழு
3. எகிப்திய சுவர் ஓவியம் வேட்டையாடுதல்
4. எகிப்திய சித்திரம் மாடுமேய்தல்
5. நேபேட்டி ராணி
6. ஓவியம் (பறவைகள்)
7. "மம்மி" சிலை

எகிப்திய சித்திரக்கலை

எகிப்திய சிற்ப சித்திரக்கலைக்கு மஸ்டபா, சமாதி, தேவாலயம் ஆகியவற்றின் சுவர்களைப் பயன் படுத்தியுள்ளனர். விவசாயம், வேட்டையாடுதல் அறுவடை, பறவைவேட்டை என்பனவாகும். ஓவியர்கள் மஞ்சள், சிவப்பு, பச்சை, நீலம், கறுப்பு, வெள்ளை ஆகிய நிறங்களைப் பயன் படுத்தியுள்ளனர் இராசதானி யுகத்துக்குரிய ஓவியமாக "மீடம்ஹி பார்தயோ" படகோட்டும் அதிபதி, நக்த் சமாதியில் உள்ள போஜன உபசரிப்பு, பௌளங்சீன், பறவை, பூனை பெபிரஸ் என்பன சிறந்த ஓவியங்களாகும்.

இத்தாலி

இத்தாலியின் எழுச்சிக்காலத்தில் வாழ்ந்த மைக்கல் அஞ்சலோ லியனடாவின் சியின் படைப்புக்களே சிறந்தனவாக விளங்குகின்றன.

மைக்கல் அஞ்சலோ சித்திரம், சிற்பம் என்ற இரு கலைகளிலும் புகழ்மிக்கவர்.

1. "பியூற்றா சிலை" தேவமாதா சுதனை மடியில் வைத்து துயரும் காட்சி
2. மைக்கல் அஞ்சலோவின் ஓடத்தில் இடம் பிடிக்க "ஆண்கள் பெண்கள் செல்லும் ஓவியம்"
3. "இறக்கும் அடிமைகள்" லோரன்ஸ் சமாதியில் உள்ள சிலைகள்
4. "பியெட்டா டேவிட் சிலை" பியஸோ வெகியோ தேவாலயத்தில் உள்ளது
5. "இறக்கும் அடிமைகள்" லோரன்ஸ் சமாதியில் உள்ள சிலைகள்
6. உடல் கட்டமைப்பைக் காட்டும் ஓவியம்.
7. கிறிஸ்துவும் சமாரியா பெண்ணும்.

ஐரோப்பிய கால ஓவியங்கள்

1. அல்மீரா - ஸ்பெயின்

இக்குகை ஓவியம் கி. பி. 1819ல் கண்டுபிடிக்கப்பட்டது. ஸ்பெயின் நாட்டின் வடபாகத்தில் அமைந்துள்ளது. இங்கு பழம் வர்ணச்சித்திரங்கள் காணப்படுகின்றன. 270மீட்டர்நீளமானது. இங்கு மிருகங்கள் அவர்களது ஆயுதங்களான எலும்புகள் கூரான கற்கள் என்பன வர்ண ஓவியங்களனாகக் காணப்படுகின்றன. அத்துடன் " கோகுல் குகை"யில் மனித உருவங்கள், ஆணழகனோடு நடனமாடும் பெண்ணின் சித்திரமும் காணப்படுகின்றன.

2. வாஸ்கோ - பிரான்ஸ்

பிரான்ஸ் நாட்டின் மொண்டக் நகருக்கு அண்மையில் உள்ளது. 1940ம் ஆண்டு ஒரு சிறுமியினால் கண்டு பிடிக்கப்பட்டது. இங்குள்ள சித்திரங்கள் அல்ரமீரா சித்திரங்களை விடப் பழைமை வாய்ந்தன. இங்கு 47 அடி நீளமான உருவமாகும் கழுத்தளவு நீரில் மூழ்கிய மான்கூட்டம், வளைந்த கொம்புடைய செம்மான், எருது, குதிரை, 15 அடி நீளமான கறுப்பு எருதுகள் என்பன காணப்படுகின்றன. இவற்றுக்கு மஞ்சள், சிவப்பு, மண்ணிறம் போன்ற நிறங்கள் பாவிக்கப்பட்டுள்ளன. பிரான்சில் பிரம்டிசோன் பகுதிகளில் "தர தோன்குகை" யில் அரைவட்ட வடிவமான கதவுகளைக் கொண்ட வீடுகள் உள்ளன. இவை மந்திர சக்தி வாய்ந்தனவாக விளங்குகின்றன.

(வரைந்த கொம்புடைய செம்மான்)



சீனா

சீனா கட்டிடக் கலைக்குச் சிறந்ததாக விளங்குகின்றது. அங்கு பல மாடிகளை கொண்ட மாளிகைகளும் சிறு குடிசைகளும் லொயெஸ் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுகளில் இருந்து அறியக்கூடியதாகவுள்ளது. இவர்களது படைப்புகளுக்கு உதாரணமாகச் சீனச்சுவர் கூறலாம் இது 3200 கிலோமீற்றர் நீளமும் 70 மீற்றர் உயரமும் கொண்டது உலோகசிலை, நாணயங்கள்,மட்பாண்டம் போன்றவற்றுக்குக் கலை நுணுக்கங்கள் கூடிய சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

சிந்தனைக்கு சில குறிப்புக்கள்

1. ரூவான் வெலிசய அனுராதபுரத்தில் துட்டகைமுனுவால் கட்டப்பட்டது.
2. சேதவனராம அனுராதபுரத்தில் உள்ள பெரிய தாது கோபம். மகாசேனனால் கட்டப்பட்டது.
3. சிராவர்த்தியின் அற்புதச்செயல் – பழைமை சிற்பம் ஆந்திர சிற்பமுறையில் அமைக்கப்பட்டது.
4. மாயாதேவியின் கனவு – கருங்கற்பாறையில் உயர் புடைப்புச் சிற்பமாய் ஆந்திர சிற்பமுறையில் அமைக்கப்பட்டது.
5. நாலந்தா கெடிகே – பல்லவ சிற்பமுறையில் அமைந்த நாலந்தாவில் உள்ள பௌத்த ஆலயம்
6. யாப்பகுவா – பாண்டிய சிற்ப முறையில் அமைந்தது.
7. கடலதெனிய விகாரை – நான்காம் புகனேகபாவினால் கட்டிவிக்கப்பட்டது. முற்று முழுதாகக் கருங்கல்லால் தென்னிந்திய சிற்பியான வாரசாரி என்பவரால் கட்டப்பட்டது.
8. நீராடு துறை – அனுராதபுரத்தில் உள்ள அரச நந்தவனத்தில் கண்கவர் அழகுடன் கருங்கற்களால் அமைக்கப் பட்டது.
9. சிற்ப சித்திர வேலைகள் நிரந்தரமாக வைக்கப்படும் இடம் – கொழும்பு நூதன பொருட்காட்சிச் சாலை
10. பொலநறுவையின் பழைய பெயர் – புலஸ்திய நகரம்.
11. மட்பாண்ட வேலைக்குச் சிறந்த இடம் – களனி, கேசல்ல, கண்டி, இரத்தினபுரி
12. முகமூடி அலங்காரம் செய்வதில் சிறந்த இடம் – அம்பலாங் கொடை, வது செதன
13. ஆபரண வேலைக்குச் சிறந்த இடம் – யாழ்ப்பாணம்
14. வெள்ளி வேலைக்குச் சிறந்த இடம் – கண்டி, யாழ்ப்பாணம்
15. மரத்தளப்பாட வேலைக்குச் சிறந்த இடம் – மொறட்டுவ
16. கடலாமை ஒட்டு கைத்தொழிலுக்குச் சிறந்த இடம் – காலி
17. பாய் இழைத்தல் தும்பு வேலைக்கு சிறந்த இடம் – தும்பறை காலி
18. "போதிகர்" எனக்குறிப்பிடுவது – வெள்ளரசு மரத்தைச்சுற்றியுள்ள வேலி
19. வரிப்படம் அமைப்பதற்குச் சிறந்த பென்சில் – "B" பென்சில்
20. தர்மசக்கரம் – தார்மீகத்தின் வெளிப்பாட்டைக் காட்டுவதாகும்.
21. எழுத்தாணி – ஓலை, மரங்கள், தோல்களில் எழுத வரைய பயன்படும் ஆணி
22. ஹம்சபுட்டுவ – அன்னங்கள் இரண்டு எதிரும் புதிருமாக இணைத்தவடிவம்
23. கிறிஸ்தவ தேவாலயங்களின் கட்டிடக் கலைவகைகள் – ரோம்முறை கொதிக்முறை
24. சாஞ்சி தூபியைச் செதுக்கியவர் யார் ? கணிஹேம் என்பவரால்
25. விஸ்வகர்ம – கலைநுட்பம் நிறைந்த சிறு கைத்தொழில்கள்
26. நிய பொது வேலை (விரல் நகவேலை) – மட்பாண்ட வேலைகளில் செய்யப்படும் வேலைகள்.
27. கதுறு அல்லது கடல் மாங்காய் – முகமூடி, றபான், போன்றவை செய்யப்படும் மரம்.
28. தொறண எண்ணெய் – வானிஸ் தயாரிப்பதற்கும் மரச் சித்திரங்களைப் பராமரிப்பதற்கும் பயன்படும் எண்ணெய்
29. துணிக்கு பயன்படும் நீலம் – கருநீலம்
30. "ஸ்காலற்" எனப்படும் நிறம் – ஒரு கபில நிறம்
31. கொறவக்கல – படிகளின் இரு புறமும் இருக்கின்ற காவற்கல்.
32. பதுறு வடிவம் – கோனாகர அமைப்புடைய வடிவம். புற்பாயில் காணலாம்.

33. அழகிய மலர், கொடிகளை ஏந்திய பெண்ணுரு கொடி நாரிலதா
34. பௌத்த கிராமிய நடனம் – கண்டிய நடனம்
35. தாமரைக் கொடி தூண்களைக் கொண்ட மண்டபம் – நிசங்கலதா மண்டபம்
36. சிங்களவரும் தமிழரும் வழிப்படும் ஆலயம் – நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம்
37. மொசாச் ஓவியம் என்பது – உடைந்த கண்ணாடித் துண்டுகளை இணைத்து உருவாக்கப்படும் சித்திரம்
38. மகரப்பட்சியின் ஆதி உருவம் பற்றிக் கூறிய நூல் – ரூபாவலி என்றும் நூல்
39. பேராவலலு (காப்பு) என்பது – தாது கோபத்தைச்சுற்றி கட்டப்பட்ட மூன்று புத்த, தர்ம, சங்க வளையங்கள்.
40. நாடோடிக் கதைகள் கூறும் நூல் – சூத சோமஜாதகய
41. பெப்ரஸ் எனப்படுவது – பண்டைய காலத்தில் எகிப்தியர் தீட்டிய ஓவிய மண்பாண்டம்
42. மகருவ என்றால் – யானையின் முக அமைப்பைக் கொண்ட ஒரு கேலிச்சித்திரம்.
43. பதானகர – பௌத்தம் போதிக்கும் பிக்குகளுக்காக அமைக்கப்பட்டசாலை
44. லாகிரி ரடா என்பது – தச்சு வேலைக் கலையைக் குறிப்பதாகும்
45. கிரேக்க கலையில் முதன்மையான சிலை – எதினாதேவதை
46. கலாசாரமுக்கோண பிரதேசம் – அனுராதபுரம், பொலநறுவை, கண்டி
47. நாடோடிக் கதைகளின் பெயர் – சூம தோமயாதகம்
48. சமனலகந்த – சிவனெளிபாத மலை
49. சித்திரத்துடன் தொடர்புடைய பாடம் – சங்கீதம்
50. பாரசீக கலை – சரசானியக்கலை எனப்படும்
51. பை சாந்தியம் – உரோமரின் கலையைக் குறிக்கும்
52. பெற்றல் – எகிப்திய மண்பாண்ட ஓவியக் காலம்
53. மக்குளு – வெண்களி சிற்ப வேலைக்குப் பயன்படுத்தப்படுவது
54. பங்கிதா – எழுதுவதற்குப் பயன்படும் எழுத்தாணி
55. அல்ராமரின் – ஒருவகை நீல ஊதா
56. சிபியா – ஒருவகை கறுப்புக் கமிலம்
57. இந்திய ஓவியர் – ரவிவர்மா
58. இந்தியாவின் பெண் ஓவியர் – அமிர்தா ஷோகில்
59. ஊதாக்காவி எனப்படுவது – தூள் வர்ணம்
60. கிறிம்சன் எனப்படும் நிறம் – –சிவப்பு நிறம்
61. எண்ணெய் வர்ணத்தைக் கண்டு பிடித்தவர் – பெல்ஜிய நாட்டைச் சேர்ந்த ஜோன்வான்ஜக் என்பவர்.
62. பழமையான வர்ணத்தயாரிப்பில் ஆக்கப்பட்ட சுவர் ஓவியங்கள் – மகியங்கனை, ஹிந்தலாகல, சிகிரியா
63. தாது கோபத்தின் முக்கிய பகுதி – அடித்தளம், அண்டம், தூபி.
64. தான்தோன்றியீச்சரர் ஆலயம் – ஒட்டிசுட்டான், கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
65. ஆசனைமனை – புத்தர் ஞானம் பெற்ற போது அமர்ந்த கல்லாசனம்
66. பல்லவ கால ஓவியங்களை வரைந்தவர் – மகேந்திரவர்மன்
67. அசோக மன்னனின் மகன் – மகிந்ததேரோ
68. மகாமேகவனம் – மகிந்ததேரே சமய உரை நிகழ்த்த தேவநம்பியதீசனால் கட்டப்பட்ட பூஞ்சோலை
69. மேலைத்தேச கீழைத்தேச சித்திரம் – மேலைத்தேசம் இயற்கை உணர்வு வேறுபாடுகள் – ; கீழைத்தேசம் இயற்கையை திரிபு படுத்துதல்.

70. நடராசர்சிலை – வெண்கலத்தால் செய்யப்பட்டது

71. சூரிய ஒளியின் வர்ணம் – ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், இளம் சிவப்பு, சிவப்பு

72. அனுராதபுரக்கால வர்ணம் – சிவப்பு, மஞ்சள், பச்சை, கறுப்பு, பின்னனி – சாம்பல் நிறம்

73. பொலநறுவைக் கால யுகம் – சிவப்பு, மஞ்சள், பச்சை, கருநீலம்

74. மஹியங்கனை யுகம் – சிவப்பு, இரத்த சிவப்பு, மஞ்சள், பின்னனி – கறுப்பு

75. கண்டியகால யுகம் – மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை

76. அச்சுப் படிதத்தலுக்கு தேவையான பொருட்கள் – மட்டை, காய், இலை, பூ, லினோச, ட்டை

77. மற்போர் – இருவர் போர் இடும் நிலைக் குறிக்கும் இவை மிகுத்லையில் சிங்ஹ பொய்கையிலும் எம்மக்க கோயிலும் உண்டு.

78. அப்சரஸ் உருவம் – தலையில் மலர்கள் நிறைந்தும், நீலக்கல் பதிந்த முத்துமாலை, அரைவாசி திறந்த கண்ணோடு அழகிய முகம் உடையவள் அப்சரஸ் உருவம்.

79. சென்பீற்றா சிலை – சென்பீற்றா தேவாலயத்தில் சலவைக் கல்லில் 174 C.m. உயரத்தில் செதுக்கப்பட்டுள்ளது.

80. கிரேக்கத்தில் காணப்பட்ட மூன்று குழுக்கள் – டொறியன் குழு, அயோனியன் குழு, கொறித்தியன் குழு.

81. கிரேக்க கட்டிட கலைக்கச் சிறந்தது – "பார்த்தினன்" ஆலயம்.

82. கிரேக்க பேரரசை உருவாக்கியவன் – மகா அலெக்சாண்டர்.

83. கிரேக்க கவிஞனர் – ஹோமர்

84. ஓவியம் பற்றி அறிய முக்கியமானவை – ரேகை, உருவ அமைப்பு, வடிவம், நிறம், மேற்பரப்பு, வெளி.

85. நிறம் மூன்று அடிப்படைத் தன்மை கொண்டவை – அலைநீளம், ஒளிர் இருள் தன்மை, அடர்த்தி

86. அரசாங்க நுண்கலை கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு – 1953ம் ஆண்டு.

87. இலங்கையில் கிறிஸ்துவ ஓவியங்களை சிறப்பாக வரைந்தவர் – ரிச்சாட் கேபிரியன்.

88. தற்போது ஓவியக் கலை வளர்ச்சிக்கு உதவி புரியும் தாபனம் – ஜோர்ஜ் கீற்ஸ்தாபனம்

89. 1974ல் சபுமல்ஸ்தாபனத்தை இலங்கையில் உருவாக்கியவர் – ஹரி பீரிஸ்.

90. இலங்கையின் புகழ்பெற்ற ஓவியக் குழுவான 43 குழு தொடர்புடைய தமிழர் – எஸ். ஆர். கனகசபை

91. வின்சர் ஓவியக்கழகம் எங்கு உருவானது – 1983ல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் உருவானது.

92. யாழ்பாணத்தில் மரவேலை தேர் அமைப்புக்கு சிறப்பாகச் செயல்பட்டவர் – கலாகேசரி ஆ. தம்பித்துரை

93. ரோசியன்டை (Raw Sienna) – ஒரு வகை மெல்லிய கருமஞ்சள்.

94. Venation Gray வெளேற்ரியன் – ஒருவகை களிமண்

95. Carmine - கானமன் – ஒருவகை சிவப்பு

96. Sap Green - ஸ்படிகறீன் – இளம் பச்சை.

97. Viridian - விரிடியன் – நீலம் கலந்த பச்சை.

98. Cerulern Blue -செருளியம் – வெளிர்நீலம்

99. Neutral Purple - நியூட்ரஸ் – ஒருவகை கமிலம் ஊதா.

100. Bib - அதி கருமை நீலம்

Sole Distributors :
POOBALASINGAM BOOK DEPOT
340 SEA STREET,
COLOMBO -11,
SRI LANKA.
TEL : 422321

Designed and Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo 13. Tel : 331395